
ISSN 1391-9504

# விஜய்

2004 மே 03 - மலர் 01, இதழ் 04



## உயிரினங்களை அழிக்கும் புவியின் வெப்பம்



## கலைத்துவம் மிளிரும் வெண்கலப் பொருட்கள்




விலை ரூபா 10/=

இந்த இதழுடன்
கோள்மண்டல போஸ்டரின்
முதலாவது கட்ட பிரதியை
பெற்றுக்கொள்ளத்
தவறாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் வராவிட்டால்....!



அம்மா தாத்தா காலையில் எழுந்ததும் ஏன் சூரியனுக்கு நமஸ்காரம் செய்கிறார்? தாத்தாவுக்குப் புத்தியே இல்லை என்று "கலகல"வெனச் சிரித்தான் சங்கர். தாத்தாவுக்குப் புத்தி இருக்கு உனக்குப் புத்தி மத்திமம் என்று சிரித்த அம்மா, இட்லியை அடுப்பிலிருந்து இறக்கி வைத்து விட்டு வெளியே வந்தாள்.

சங்கர் சித்திரம் வரைவதில் கெட்டிக்காரன். பார்த்ததை அப்படியே வரைந்து விடுவான். இப்போ அவன் தாத்தா சூரியனுக்கு நமஸ்காரம் பண்ணுவதுபோல் கேலிச் சித்திரம் ஒன்று வரைந்து கொண்டிருந்தான். அம்மா இதைப் பார்த்து நீ வரைந்ததைத் தாத்தாவுக்குக் காட்டு சந்தோஷப்படுவார் என்றாள்.

சங்கர் வரைவதை நிறுத்தி விட்டு, அம்மா தாத்தா ஏன் அப்பிடிப்பண்றார் எண்டு சொல்லுங்களேன் என்று கெஞ்சினான். சரி சொல்றேன் கேள் என்றாள் அம்மா.

இது இரவா? காலையா?

என்ன அம்மா இது ஒரு கேள்வியா? சந்தேகமேயில்லைக் காலைதான்.

ஒரு நாளின் இருபத்து நான்கு மணித்தியாலங்களும் இருட்டாக அதுதான் இரவாக இருந்தால் எப்படியிருக்கும்?

ஐயோ அம்மா நெனைச்சுக் கூடப்பாக்க ஏலாது பயமாயிருக்கும் ஒண்ணுமே பண்ண முடியாது, ஸ்கூலுக்குப் போகமுடியாது சங்கர் தன் பயத்தை வெளிப்படுத்தினான்.

வானத்தில் சூரியன் வரும் நேரம் தான் இருள் நீங்கிக் காலை மலர்கிறது. உலகெங்கும் ஒளி பரவுகிறது. மனிதன், பறவை, மிருகம் ஏன் மரம் செடி கொடிகள் பூக்கள் எல்லாமே உற்சாகம் பெறுவதைப் பார்க்கலாம். உன்னைத்தவிர என்று சொல்லிய அம்மா சங்கரின் தலையில் செல்லமாகக் குட்டினா.

அப்படியாயின் அழகிய காலைப் பொழுதைத் தருவது சூரியன். இது உதிக்கவில்லை யென்றால் எதுவுமே இயங்காது. மனிதன் சீவிப்பதற்கு மிக அவசியமானவன் சூரியனே. இறைவன் நமக்குத் தந்த மாபெரும் கொடை சூரியன்.

நமது நாளாந்த சீவியத்தில் ஒரு அரிய துணைவன் சூரியன். கடமைதவறாத கர்மவீரன். சூரியன் காலையில் கிழக்கே உதித்து, மாலையில் மேற்கே மறையும் ஒழுங்கிலிருந்து, ஒரு போதும் மாறாத பண்பாளன். சூரியன் இனமதம் பாராது, நாடு, நகரம், கிராமம் என்ற பேதம் பாராது எல்லோருக்கும் ஒளியைக் கொடுப்பவன். வெயிலைத் தருபவன் சூரியனே. காலையிலிருந்து மாலைவரை தன் கடமையைக் கச்சிதமாகச் செய்து முடித்து விட்டு மறைந்து விடுவான்.

மரஞ் செடி கொடிகள் வளர்வதற்கு அவனுடைய உதவி தேவை. கழுவிப் போடும் துணிமணிகள் காய்வதற்கு வெயில் வேண்டாமா? தோட்டச்செய்கைக்கு, வேளாண்மை செய்வதற்கு விளையாடுவதற்கு என்றிப்படி எல்லாத் தேவைகளுக்கும் சூரியனின் உதவி தேவை. சில வேளைகளில் வெயில் வியர்வை என்று கஷ்டப்படுகிறோம். சூரிய ஒளி இன்றி ஏழை மட்டுமல்ல பணக்காரனும் வாழமுடியாது. காலையில் சூரியனின் மெல்லிய ஒளி கண்ணில் படுவது கண்ணுக்கு நல்லது உடம்புக்கு நல்லது என்றும் கூறுவர். நமது முன்னோர் சூரியனைத் தெய்வமாக நினைத்து வழிபட்டதுண்டு.

தாத்தா பழைமையை விரும்புபவர். இதனால் தான் அவர் சூரிய நமஸ்காரம் பண்றார். இப்போ புரியுதா என்று சங்கரைப் பார்த்து முறுவலித்தா அம்மா.

ரூபராணி ஜோசப்

# பறவையுள் பெரியது தீக்கோழி

உலகில் வாழும் பறவைகளுள்
உயர்ந்து கொழுத்தது தீக்கோழி
பலத்தில் நிறைந்த தீக்கோழி
பறக்கவே முடியாப் பறவையிது!

இரண்டரை மீற்றர் உயரமிது
நூற்றைம்பது கிலோ பாரமிது
வரிக்குதிரையும் மானும் மேயுமிடம்
தீக் கோழியும் சேர்ந்து மேய்ந்திடுமாம்!

நீண்ட கழுத்தை உடையதிது
நீட்டிப் பார்த்து உலவி வரும்
வேண்டிடா தபாயம் நேர்ந்திடிலோ
வேகமாய் ஓடி மறைந்துவிடும்!

உறுதியும் நீளமும் தடிப்பு முள்ள
உரமுடைக் கால்களில் தசையதிகம்
பலமிகு விரலிரண்டைக் கொண்டதனால்
வேகமாய் அது ஓடிவிடும்!

ஆபிரிக்கக் காடுகளில் பரவியே
காணும் பறவையிது மேவியே
அறுபது கிலோமீற்றர் - தூரமதை
மிகைத்தொரு மணிக்குள் ஓடிடுமாம்!

- ஏ. இக்பால்



# கையுறைகளின் அறிமுகம்



சுத்தத்தைக் கையாளவேண்டிய சந்தர்ப்பங்களிலும் ஆபத்துக்களிலிருந்து தப்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும் நாம் கையுறைகளைப் பாவிப்பதுண்டு. இவ்வாறு கையுறைகளைப் பயன்படுத்தும் வழக்கம் மருத்துவ மனையொன்றிலிருந்தே ஆரம்பித்தது.

அமெரிக்காவிலுள்ள 'சென் ஜோன்' மருத்துவமனையில் கடமையாற்றிய மருத்துவத் தாதியொருவருக்குக் கைகளில் திடீரெனச் சிரங்குகள் போன்று ஏதோ காயங்கள் தோன்றின. இதனை அவதானித்த மருத்துவர் வில்லியம் ஸ்ருவர்ட் என்பவர் இவ்வாறு தொற்று வியாதிகளிலிருந்து காத்துக் கொள்வதற்குக் கையுறைகளைப் பயன்படுத்துமாறு கூறினார். இதனையடுத்துக் கையுறைகளைப் பயன்படுத்தும் வழக்கம் பெருகத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
இல: 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2314714
பெக்ஸ்: 2314968

1977க்குப் பின்னர் அரசாங்கங்களின் பொருளாதாரக் கொள்கைகளுடன் நம் நாட்டின் சகலவிதமான பொருளாதாரக் கதவுகளும் வெளிநாடுகளுக்கு அகலத்திறந்துவிடப்பட்டு விட்டன. வெளிநாடுகளுக்குக் கதவுகளைத் திறப்பதற்காகவோ என்னவோ இந்தப் பொருளாதாரக் கொள்கைகளுக்குத் 'திறந்த சந்தைப் பொருளாதாரக் கொள்கை' (Open Market Economic Policy) என்று நாமகரணம் செய்யப்பட்டது. இதன் பொருள் ஒரு நாட்டின் திறந்துவிடப்பட்ட பொருளாதாரக் கதவுகள் வாயிலாக, எந்தவிதக், கட்டுப்பாடுகளும் இன்றி உள் நுழையும் எவரும் 'திறந்த வீட்டில் நாய் நுழைந்தது போல' எதனையும் எடுத்துக் கொண்டு போகலாம் என்பதாகும்.

ஆனால் இத்தகைய பொருளாதாரக் கொள்கையால் இழப்புக்களே அதிகம் ஏற்படுகின்றன என்பதே உண்மை.

நம் நாட்டுக் கிராமப்புறப் பெண்கள் இப்போது இலட்சக்கணக்கில் மத்திய கிழக்கு நாடுகளுக்கும், வேறு நாடுகளுக்கும் பணிப்பெண்களாகத் தொழில் புரியவென அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இவர்கள் இலங்கையின் தொழில் முகவர்களிடமும், வெளிநாடுகளில் தொழில் கொள்வோர்களிடமும் சிக்கி அனுபவிக்கும் இன்னல்கள் தொடர்ச்சியாகப் பத்திரிகைகள் வாயிலாக வெளிக்கொணரப்பட்ட போதும், அது தொடர்பில் அரசாங்கம் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. இன்று நமது நாட்டில் அந்நியச் செலாவணி உழைக்கும் முதல்தரத்துறையாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு உள்ளதென இலங்கை மத்திய வங்கி புள்ளி விபரங்களைக் காட்டி மார் தட்டிப் பெருமைப்பட்டுக் கொள்கிறது. ஆனால் அவர்களோ தம் உயிரை இழந்தும், உடற்பாகங்களை இழந்தும், உடலுறுப்புக்களை இழந்தும் சவப்பெட்டிகளில் நாடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இதனைவிட மனநிலை பாதிக்கப்பட்டு நாடு திரும்பியோர் எவ்வளவு பேர்? இங்கே நம்நாட்டுக் கிராமங்களில் குடும்பங்கள் கெட்டுச் சீரழிந்தது எவ்வளவு?

திறந்த பொருளாதாரக் கொள்கையால் நாம் நமக்கேயுரிய உள்நாட்டுச் சூழலுக்கே பொருத்தமான நமது பாரம்பரிய விவசாயப் பொருளாதார முறையை இழந்து விட்டோம். உள் நாட்டுச் சிறு முதலாளித்துவம் நலிந்து பல்தேசியப் பாரிய பொருளாதாரத் திமிங்கிலங்கள் படிப்படியாக அவற்றை விழுங்கி வருகின்றன. முற்றிலும் செயற்கையான பொருட்களை நறுமணம் கமழும் இயற்கைப் பொருளென விளம்பரப்படுத்தி நம் நாடி நரம்புகளைக் கூட செயற்கையாக்கிவிடும் ஒரு மாபெரும் சதி நம்மைச் சுற்றி நடப்பதைப் புரிந்து கொள்ளும் திராணிகூட நம்மிடம் இருந்து பறிக்கப்பட்டு விட்டது. நாம் எங்கே போக வேண்டும் என்ற இலக்கைத் தீர்மானிக்கும் உரிமை இப்போது நம்மிடம் இல்லை என்பது தான் பரிதாபத்துக்குரிய உண்மை.

- ஆசிரியர்

## வாகனப் பயணங்களின் போது..... மாணவர்கள் இருக்கைப் பட்டி அணிவது கட்டாயமாக்கப்படவுள்ளது!

பாடசாலை மாணவர்கள் வாகனங்களில் பயணம் செய்யும் போது பாதுகாப்பிற்கான இருக்கைப் பட்டிகளை அணிவது கட்டாயமாக்கப்படவுள்ளது.

வாகன விபத்துக்கள் அதிகரித்து வருவதனைக் கவனத்தில் கொண்டு, இதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கிலேயே போக்குவரத்துப் பொலிஸார் இதனை அமுல்படுத்தவுள்ளதாக அறியவருகின்றது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் விபத்துப் பிரிவில் அனுமதிக்கப்படுவோரில் ஐம்பது வீதமானோர் வாகன விபத்துக்களின் காரணமாக காயப்பட்டவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே, இவற்றை இயன்றளவில் குறைக்கும் நோக்கில் வாகன இருக்கைப் பட்டிகளை அணியவேண்டியதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளிக்கும் விசேட நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இதன்படி இருக்கைப் பட்டிகளை அணிவது கட்டாயமாக்கும் சட்டதிட்டங்களை வகுப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றுவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறிப்பாகச் சிறுவர்களுக்கு இந்த இருக்கைப் பட்டி கட்டாயமாக்கப்படுவது, அவர்களின் உயரிய பாதுகாப்பினை கருத்தில்கொண்டே மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மாணவர்களைக் கண், காது சோதனைக்கு உட்படுத்தல்....!

பாடசாலை மாணவர்களுக்கு வருடத்திற்கு ஒரு தடவையோ அல்லது இரு தடவையோ அவர்களின் கண், காதுகளைப் பரிசோதிக்க வேண்டியது அத்தியாவசியமாக்கப்படுதல் வேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் ஆசிரியர்கள் கற்பிக்கும் போது, மாணவர்கள் தமது கண்பார்வை குறைப்பாட்டின் காரணத்தினாலோ, அல்லது காது கேளாமையின் காரணத்தினாலோ பாடங்களைச் சரிவரப் புரிந்துகொள்ளவோ! பயிலவோ! முடியாமல் இருப்பார்கள். இதனால் அவர்களின் கல்வி விருத்தி பெரிதும் பாதிக்கப்படும். ஆனால் தம்மில் உள்ள இவ்வகைக் குறைபாடுகளே இதற்குக் காரணம் என்பதை அவர்கள் அறிந்திருப்பதில்லை. எனவே இவற்றைக் கருத்திற் கொண்டே வருடத்திற்கு இருமுறையோ, ஒருமுறையோ மாணவர்கள் அனைவரையும் கண், காது, சோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



செவ்வாய்க் கோளிற்கு அனுப்பிவைக்கப்பட்ட "மார்ஸ்" விண்கலம் அநேகமான தகவல்களை நமக்கு அனுப்பியது. ஆனால் செவ்வாய்க் கோளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இவை போதுமானவையாக அமையவில்லை. எனவே இதனைக் கருத்திற் கொண்டு செவ்வாய்க் கோளைச் சுற்றியவாறே, செவ்வாய் பற்றிய விபரங்களை அனுப்பக்கூடிய விண்கலமொன்றை 2005ம் ஆண்டளவில் அனுப்புவதற்கு 'நாஸா' நிறுவனம் தயாராகி வருகின்றது.
இந்த விண்கலம் செவ்வாய்க்குச் சென்று அங்கு களமிறங்கிப் பொருத்தமான ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய இடங்கள் எவை என்பதையும் ஆராயும்.

## கஷ்டப் பிரதேச மாணவர்களுக்காக நகர்ப்புறப் பாடசாலைகளில் மாணவர் விடுதிகள்

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து, நகர்ப்புறங்களிலுள்ள முன்னணிப் பாடசாலைகளில் அனுமதியைப் பெறும் மாணவர்கள், தங்குமிட வசதியின்றி அவதிப்படுவதைத் தவிர்க்கு முகமாக. மேற்படி முன்னணிப் பாடசாலைகளில் மாணவர் விடுதிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறிப்பாகப் பின்தங்கிய கஷ்டப் பிரதேசங்களில் வாழும் மாணவர்களே இந்நிலைமைக்கு ஆளாகின்றனர். இதனை ஏராளமான பெற்றோரும் பெரும் குறையாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இவ்வாறு நகர்ப்புறங்களுக்கு வருகின்ற மாணவர்கள் அப்பகுதிகளிலுள்ள தனியார் வீடுகளிலேயே தங்கி வருகின்றனர். இதனால் பெருமளவில் செலவும் ஏற்படுகின்றது. ஆகவே, இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் கருத்தில் கொண்டு கூடிய விரைவில் மாணவர் விடுதிகளை அமைக்கும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பத்திரிகை ஆசிரியரின் தந்தை காலமானார்



"விஜய்" பத்திரிகையின் ஆசிரியரும், எழுத்தாளரும், கவிஞரும், சட்டத்தரணியுமான திரு. இரா.சடகோபனின் தந்தையார் ராமன் கதிர்வேல் ராமையா அவர்கள் கடந்த 28.04.2004 ஆம் திகதியன்று காலமானார். இறக்கும் போது இவருக்கு வயது 93.

ஆர்.கே.ஆர் என அன்புடன் அழைக்கப்பட்ட, அவர் ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் மலையகத்தின் நோர்வூட், நாவலப்பிட்டி பகுதிகளில் கலைப்பணிகள் காரணமாக நன்கு அறியப்பட்டவராய் இருந்தார். நாடகங்கள், கதாப்பிரசங்கங்கள், கூத்துக்கள், பாட்டுப்பாடுதல் ஆகிய நிகழ்ச்சிகளை நடத்துவதில். இவர் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டவராவார். அன்றைய நாட்களில் இந்தியாவில் இருந்து இலங்கை வந்த இந்திய கலைஞர்களுக்குத்தங்குமிட வசதிகளைச்செய்து கொடுத்து விருந்தளித்து உபசரிப்பதிலும் இவர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தார். 1950 களின் பிற்பகுதிகளில் பெருந்தோட்ட மக்களின் அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டமைக்கு எதிரான தொழிற்சங்க நடவடிக்கைகளிலும் அன்னார் பங்களிப்புகளை செய்திருந்தமையும் நாடறிந்த விடயமாகும்.

'விஜய்' அடுத்த இதழ் மே 17ஆம் திகதி வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவில் நடித்த 'விலி' டொல்ஃபின் நாயகனின் பரிதாப மரணம்!



உலகிலேயே பெரும் புகழ்பெற்றிருந்த 'கெயிக்கோ' என்ற டொல்ஃபின், கடந்த டிசம்பர் 13ம் திகதியன்று மரணமாகியது. 'ஃப்ரீவிலி' எனப்படும் ஆங்கிலப் படமொன்றில் நடித்ததன் மூலமாகவே இந்த டொல்ஃபின் பிரபல்யத்தைப் பெற்றிருந்தது. இதனால் அநேகமானோர் இதனை 'ஃப்ரீவிலி' என்றே அழைக்கத் தொடங்கினர். இறக்கும் போது இதன் வயது 27.

கெயிக்கோ முதன்முதலாக 1979ம் ஆண்டில் ஐஸ்லாந்து நாட்டிலேயே மனிதர்களுடனான புழக்கத்தை ஆரம்பித்தது. இதிலிருந்து அது கடலில் தனது வாழ் நாட்களைக் கழிக்கவில்லை. மனிதர்களால் உருவாக்கப்பட்ட, நீர் நிலைகளிலேயே நாட்களைக் கழித்து வந்தது. இதனால் தனது விருப்பத்திற்கேற்ற, உணவுவகைகளை உண்ணுவதற்கு அதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதனையடுத்து 1993ம் ஆண்டு எடுக்கப்பட்ட 'ஃப்ரீவிலி' திரைப்படத்தையடுத்தே 'கெயிக்கோ' பிரபலம் பெறத் தொடங்கியது. தொடர்ந்து மேலும் சில திரைப்படங்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் கலந்து கொண்டது.

ஆனால் 'கெயிக்கோ''வைச் சுதந்திரமாகச் செயற்படவிடாமல் பணம் சம்பாதிக்கும் இந்தச் செயலை 'மிருகவதைக்கு எதிரான' சங்கங்கள் பல கண்டிக்கத் தொடங்கின. 'கெயிக்கோ''வை சுதந்திரமாக விட்டு விடும்படி அவர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதன் மற்றுமொரு கட்ட நடவடிக்கையாக 'ஃப்ரீவிலி' மீட்புப்படை எனும் சங்கமொன்றை அமைத்தனர். 'கெயிக்கோ' சுதந்திரமாக விடக்கூடிய இடமொன்றை இவர்கள் தேடினர். ஐஸ்லாந்து கடற்பரப்பே "கெயிக்கோ"விற்கு ஏற்ற இடமாக அமையும் என்பதைப் புரிந்து கொண்ட அவர்கள் ''கெயிக்கோ''வை விடுவிக்கும் அழுத்தங்களை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் இறங்கினர்.

மிகச்சிறிய நீர்த் தடாகமொன்றில் இருந்த 'கெயிக்கோ' 1998ல் விடுதலை பெறும் நாளும் வந்தது. 6 தொன் நிறை கொண்ட "கெயிக்கோ" அமெரிக்க விமானப் படையினரின் பொருட்களைக் கொண்டு செல்லும் சரக்கு விமானமொன்றில் ஐஸ்லாந்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. இதற்கென 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவிடப்பட்டன.

ஐஸ்லாந்து கடற்பரப்பில் ''கெயிக்கோ'' சேர்க்கப்பட்ட போதிலும் கடல்பகுதியில் எவ்வாறு இரை தேடுவது என்பது பற்றி அதற்குத் தெரிந்திருக்கவில்லை. இதனால் கடலில் 'கெயிக்கோ'வை விட்டுவிடாமல் கடல் பகுதியிலேயே ஒரு தடாகமொன்றை அமைத்து அதில் "கெயிக்கோ"வை இருக்கச் செய்தனர். இதன் மூலம் அதற்கு கடலில் வாழப் பழகிக் கொள்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டன. மேலும் விசேடமாக அதற்கு இறைச்சி வகைகளை உணவாகக் கொடுக்க வேண்டியும் ஏற்பட்டது. 'கெயிக்கோ'விற்கென இவ்வாறு செலவிடப்படும் பணமானது வீண் செலவு எனக் கூறிய மீனவர்கள் சிலர், "கெயிக்கோ"வைக் கொன்று விடும்படியும் அச்சுறுத்தத் தொடங்கினர்.

வருடக்கணக்காகக் "கெயிக்கோ"விற்கு கடலில் சீவிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டதையடுத்து 2002ம் ஆண்டு ஜூலை மாதம் முழுமையாக அது கடலில் சுதந்திரமாக விடப்பட்டது.

இதனையடுத்து "கெயிக்கோ" சுமார் 1400 கிலோமீற்றர் தூரம் கடந்து சென்று நோர்வே நாட்டின் கடல்பகுதிக்குச் சென்றது. தனது வாழ் நாளைக் கழிப்பதற்குப் பொருத்தமான இடம் அதுவே எனவும் அது முடிவு செய்திருந்தது.


எப்படியிருந்த போதிலும் "கெயிக்கோ" மீது கவனம் செலுத்திவந்த மிருகவதைக்கு எதிரான சங்கத்தினர் கெயிக்கோ செல்லும் இடங்களிலெல்லாம் அதன் பின் தொடர்ந்தனர். நாளொன்றிற்கு அதற்குத் தேவையான 40 அல்லது 50 கிலோ நிறை கொண்ட உணவை இவர்கள் தான் அதற்கு வழங்கி வந்தனர். இருந்த போதிலும் தனது 27வது வயதில் 'கெயிக்கோ' மரணத்தைத் தழுவியது.

பொதுவாக இவ்வகை டொல்ஃபின்கள் 35 வருடங்கள் உயிர் வாழக் கூடியன. ஆயினும் ''கெயிக்கோ''வைப் பொறுத்தவரையில் அதனை அதற்குரிய இயற்கைச் சுவாத்தியத்திற்குள் விடாமல், மனிதர்களுடனே செயற்கைத் தடாகங்களுக்குள் நீண்ட நாட்கள் வாழச் செய்ததன் பிரதிபலனாகவே அது விரைவில் மரணத்தைத் தழுவிய தாகவும் கூறப்படுகின்றது.

## காகிதம் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றது?

மரத்தில் இருந்து பெறப்படும் மூலப் பொருட்களைக் கொண்டே காகித உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் ஒரு பாரிய இயந்திரத்தில் ஒரு புறத்தில் மரக்கட்டைகள் உட்செலுத்தப்பட்டு மறுபுறத்தில் தயாரித்து முடிக்கப்பட்ட காகிதம் உருவாக்கப்படுவதையே இங்கே உள்ள படத்தில் நீங்கள் காணுகிறீர்கள்.

இவ்விதம் காகிதம் எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது என்று சற்றுப் பார்ப்போம். ஆரம்பத்தில் மரக்குற்றிகள் வெட்டப்பட்டு அவை அரைக்கும் இயந்திரத்தில் செலுத்தப்பட்டு மெல்லிய தூளாக அரைக்கப்படுகின்றன. பின்னர் அந்தூளில் கோஸ்டிக்சோடா மற்றும் இரசாயனத் திரவியங்கள் சேர்க்கப்பட்டுச் சூடாக்கப்பட்டு கொழுகொழுப்பான பசை தயாரிக்கப்படுகின்றது. அப்பசை நன்கு சுத்தப்படுத்தப்பட்டு வெள்ளையாக வந்ததும் பல்வேறு உருளைகளுக்கு ஊடாக செலுத்தப்பட்டு அழுத்தப்பட்டு கடதாசித் தாள் தயாரிக்கப்படுகின்றது. இது பின்னர் பெரும் உருளைகளில் சூடுகாட்டப்பட்டுச் சுற்றப்பட்டும் பின் தமக்கு வேண்டிய அளவுகளில் வெட்டப்பட்டுச் சந்தைக்கு அனுப்பப்படுகின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ரென்சம் ஈ ஓல்ட்ஸும் அவர் தயாரித்த வாகனமும்




# கார் தயாரிப்பில் அமெரிக்காவின் ஈடுபாடு



பென்ஸ் அண்ணா கூறுகின்றவற்றைக் கேட்டுக் கொரல்லா தம்பி ஆச்சரியப்பட்டுப் போயிருந்தது. பென்ஸ் அண்ணா இத்தனை விடயங்களை அறிந்திருக்கிறாரே! என மலைத்துநின்றது. "அண்ணா அமெரிக்கர்களும் கார் தயாரிப்பில் இறங்கினர்தானே?" கொரல்லா தம்பி கேட்டது.

"ஐரோப்பிய நாட்டவர்கள் தான் முதன்முதலில் கார் தயாரிப்பில் இறங்கியவர்கள். அதற்காக அமெரிக்கர்களும் சும்மா இருக்கவில்லை. வித விதமான கார் தயாரிப்பில் அவர்களும் இறங்கினர். நான் முன்னர் ஒரு தடவை குறிப்பிட்ட ஜே. டபிள்யு. கார்ஹாப் என்பவர் தான் அமெரிக்காவில் இந்த கார்ப் பரபரப்பை ஏற்படுத்தியவர். அவர் 1878இல் அமெரிக்காவில் 200 மைல் தூர கார் ஓட்டப் போட்டியொன்றை நடத்தத் தீர்மானித்தார்."

"புரியவில்லை....அந்த பழைய கார்களினால் 200 மைல் தூரத்திற்கு செல்லக் கூடியதாக இருந்திருக்குமா?" கொரல்லா தம்பி கேள்வி எழுப்பியவாறு பென்ஸ் அண்ணாவைப் பார்த்தது.

"ஆம் ... இந்தப் போட்டியில் பங்கு பற்றுவதற்கு 7 கார்கள் விண்ணப்பித்திருந்தன. ஆனால் போட்டி நாளன்று இரண்டே இரண்டு கார்களே போட்டிக்கு வந்தன. கிரின்பே என்ற நகரிலிருந்து ஒரு காரும், ஒஷ்கொஷ் என்ற நகரிலிருந்து மற்றுமொரு காருமே இவ்வாறு போட்டிக்கு வந்தன. இதில் வேகம் கூடிய கார் என கருதப்பட்ட 'கிரின்பே' கார் இடைவழியில் நின்றுவிட்டது. மணிக்கு 6 மைல் தூர வேகத்தில் சென்ற ஒஷ்கொஷ் கார் தான் இதில் வெற்றி பெற்றது." அண்ணா கூறியது.

"இதற்கு நிறைய நாட்கள் சென்றிருக்குமல்லவா?"

"ஆமாம்! நிறுத்தி நிறுத்தித்தான் இந்தக் கார் பயணம் சென்றது. எப்படியிருந்தாலும் இந்த போட்டியின் காரணமாக அமெரிக்கர்களுக்கு காரின் மீது மிகுந்த ஈடுபாடு ஏற்படத் தொடங்கியது". என்றது பென்ஸ் அண்ணா.

"அண்ணா ஆரம்ப காலத்தில் முதன் முதலாக காரில் அதிகூடிய தூரத்தை சென்றது யார்? என்று தெரியுமா?" என கொரல்லா தம்பி கேட்டது.



சார்ள்ஸ் பிரென்க் சகோதரர்களின் கார்



சார்ள்ஸ் டூரியே

"இந்த சாதனையையும் பென்ஸ் தான் நிகழ்த்தியது. நமது கார்ல்பென்ஸ் ஐயாவின் மனைவியார் ஒரு நாள் இரவு நேரம் பென்ஸ் காரில் மெக்ஹைமிலிருந்து மம்போஸிம் வரை 62 மைல் தூரம் சென்று தனது தாயாரை பார்த்துவிட்டு வந்தார்".



எமில் கோன்ஸ்டன்ட்

"அந்த காலத்திலும் பெண்கள் கார் ஓட்டியுள்ளனர் போல உள்ளதே?" என்றது கொரல்லா தம்பி.

"ஆமாம் இன்னும் விஷயங்கள் உள்ளன. 1888 இல் ஆகஸ்ட் மாதம் அமெரிக்காவில் முதல் தடவையாக என்ஜின் தயாரிப்பு தொழிற்சாலையொன்று நிறுவப்பட்டது. அந்த கால கட்டத்தில் 'பியானோ' தயாரிப்பில் ஈடுபட்டுவந்த நிறுவனமொன்று டெம்லர் அவர்களின் தொழில் நுட்ப என்ஜின் தயாரிப்பில் ஈடுபட்டது. ஆனாலும் அது அந்தளவிற்கு வெற்றிகரமாக அமையவில்லை."

"அதுதானே பார்த்தேன்...அமெரிக்காவின் டூரிய சகோதரர்கள் தான் கார் தயாரித்தவர்கள் என்று நான் கேள்விப்பட்டுள்ளேன்" என தான் தெரிந்திருந்த ஒரு விடயத்தை கூறியது கொரல்லா தம்பி.

"அது பற்றி நான் பின்னர் கூறுகின்றேன், அதற்கு முன்னர் ரென்சம் ஈ ஓல்ட்ஸ் என்பவரைப் பற்றியும் சொல்ல வேண்டியுள்ளது. அவர் தயாரித்த நீராவி என்ஜின் வாங்குவதற்கு இந்தியாவும் கேட்டிருந்தது. இந்தக் காரை இந்தியாவிற்கு கொண்டு சென்ற கப்பல், கடலில் வைத்து காணாமல் போய் விட்டதால், இந்தியாவிற்கு கொண்டு வரப்படவிருந்த முதலாவது காரின் வருகையும் தடை பட்டுப் போனது" என்றது பென்ஸ் அண்ணன்.



டூரியேயின் மாற்றி அமைக்கப்பட்ட வாகனம்

கொஞ்சம் கொஞ்சமாக வெயிலின் வெக்கை அதிகமாக அதிகமாக கொரல்லா தம்பி வானத்தை அண்ணாந்து பார்த்தவாறு, "இதோ வெய்யில் எரிகிறது" என்றது.

"அதை விட்டுவிட்டு நாம் விஷயத்திற்கு வருவோம்" எனக் கூறிய பென்ஸ் அண்ணன், தனது பேச்சைத் தொடர்ந்தார். பிரான்ஸில் கார் தயாரிப்பில் சிறந்த நிபுணர் ஒருவர் இருந்தார். எமில் கோன்ஸ்டன்ட் லைவாஸர் என்பதே அவரது பெயர். அவர் 1891ல் காரொன்றைத் தயாரித்தார். இவரது கார் நமது கார்களை ஒத்த வகையிலேயே இருந்தது. 'கிளச்சை' மிதித்து கியரைப் போடும் முறையை இக்கார் கொண்டிருந்தது. பின்புற டயரினால் வாகனத்திற்கு ஓட்ட விசையை வழங்கும் தன்மையையும் இது கொண்டிருந்தது."

"ஷா ரொம்ப ஜோர் தான்..." என்றது கொரல்லா தம்பி.

"அமெரிக்காவில் ஜோன் லெம்பர்ட் என்றொருவர் இருந்தார். இவரும் ஒரு திறமைசாலி. 1891ல் அவரும் ஒரு கார் தயாரித்தார். இந்தக் காரை 550 டொலர் செலவில் அவரால் தயாரிக்க முடிந்தது. ஆனால் விலை அதிகம் என அதனை யாரும் விலைக்கு வாங்க முன்வரவில்லை".

"நிறையபேர் கூடிய விலைக்கு விற்கப் போவதால் தான் விஷயத்தை குழப்பிக் கொள்கிறார்கள்" என இடைமறித்தது கொரல்லா தம்பி

"நமது பென்ஸ் ஐயா 1893இல் சிறந்தவொரு காரை தயாரித்தார். அதற்கு 'பென்ஸ் வெலோ' என பெயரிட்டார். இந்தக் காரை அறிமுகப்படுத்தியதையடுத்தே ஒரே தடவையில் பல எண்ணிக்கையிலான கார்களை தயாரிப்பது ஆரம்பமாகியது' எனக் கூறியது பென்ஸ் அண்ணா.

"பென்ஸ் அண்ணாக்களுக்கு எல்லாமே கிடைத்தது தானே... அதன்பிறகு என்ன நடந்தது...? கொரல்லா தம்பி கேட்டதும்,

"சார்ள்ஸ் டூரியே, பிரென்க் டூரியே என அழைக்கப்பட்ட சகோதரர்கள் இருவர் தான் அமெரிக்காவில் புரட்சிகர மாற்றத்தையே நிகழ்த்தினர். இந்த இருவரும் ஆரம்பத்தில் சைக்கிள் தயாரித்தவர்கள். ஆனால் 1893 செப்டெம்பர் மாதம் 22ம் திகதி இவர்கள் இருவரும் முதல் தடவையாக கார் தயாரிப்பைப் பரீட்சித்துப் பார்த்தனர். இதுவே அமெரிக்காவின் முதல் தடவையாகப் பயன்படுத்தப்பட்ட முழுமையான சிறந்த காராக அமைந்தது." என்ற பென்ஸ் அண்ணா. "இன்றைக்கு இவ்வளவு போதும்" என பேச்சை நிறுத்திக் கொண்டது.



(தொடரும்..)



பென்ஸ் வெலோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 16 இயற்கை

**உலக அதிசயங்கள் பலவற்றைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். கடந்த காலங்களில் மனிதன் உருவாக்கிய கட்டிடங்கள், பிரமாண்டமான படைப்புக்கள் பலவற்றை உலக அதிசயங்களாக நாம் குறிப்பிடலாம். ஆனால் மனிதனின் முயற்சி இன்றி, இயற்கையாகவே உருவாகிய, புதுமையானவைகள் பல உலகில் உண்டு. இவை இயற்கை அதிசயங்களாகும். ஆயினும் அதிசயங்களில் 16ஐ மட்டும் இங்கு குறிப்பிடுகின்றோம்.**



## அமேசன் காடுகள்

தென் அமெரிக்காவில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பரப்பில் பரவி இருக்கும் அமேசன் காடுகள் புதுமையான படைப்பாகும். இவை மழைக் காடுகளாகும். இங்குள்ள மிருகங்கள் மற்றும் தாவரங்களின் வகை, அவற்றின் எண்ணிக்கை பற்றி இன்னும் கணக்கிட முடியாதுள்ளது. உலகின் எந்தப் பிரதேசத்திலும் காணமுடியாத தாவரம் மற்றும் விலங்குகளை இங்கே காணலாம். இக்காடுகள் 7 மில்லியன் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டவையாகும்.



## அந்தாட்டிக்கா

உலகின் தென் அந்தத்தில் பனிக்கட்டிகளால் உருவான கண்டம் அந்தாட்டிக்காவெனக் குறிப்பிடப்படுகின்றது. பரப்பளவில் உலகின் 5வது மிகப் பெரிய கண்டத்தை ஒத்தது. கண்டங்களில் இறுதியாக கண்டுபிடித்த கண்டமாக இதைக் குறிப்பிடலாம். இதன் பனிக்கட்டிகளின் படையானது 2000 மீற்றராக உள்ளது. இங்குள்ள நிலப்பரப்பின் பரப்பளவானது 14 கிலோ மீற்றர் ஆக உள்ளது.



## சாக்கடல்

தண்ணீரில் மூழ்காமல் மிதக்கக் கூடிய கடலொன்று இருப்பதாயின் அது சாக்கடலாகும். யோர்தானுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையில் காணப்படும் இவ் உவர் நீரக் கடல் சுமார் 10,000 வருட காலமாக ஆவியாக்கத்திற்கு உட்பட்டதன், விளைவாக உப்பின் ஈர்க்கும் தன்மை அதிகமாக உள்ளது. இதனால் கடலில் இறங்கும் ஒருவர் மூழ்கமாட்டார்.



## எவர்க்லேட்ஸ் தேசிய பூங்கா

இங்கு உலகின் அரிய, காணக் கிடைக்காத ஒரு சூழல் அமைப்பொன்றைக் காணலாம். அமெரிக்காவின் தென் புளோரிடாவில் அமைந்திருக்கும் இந்த இடமானது ஒரு சேற்று நிலமாகும். ஆயினும் இப்பகுதி பெரிய மரங்களாலும் செடி, கொடிகளாலும் மூடப்பட்டுள்ளது. இதனால் மரங்களால் மூடப்பட்ட ஆறு என இப்பிரதேசம் குறிப்பிடப்படுகின்றது.



## பியோட்

உயரமான மலைகளுக்கிடையில் கடல் பரவிச் செல்வது "பியோட்" என குறிப்பிடப்படுகின்றது. இவ்வகையான இடங்களை உலகில் காண்பது அபூர்வம். நோர்வே நாட்டில் இவ்வகையான இடத்தைக் காணலாம். அலஸ்கா நாட்டிலும் இத்தகைய இடமொன்று காணப்படுகின்றது. மண் அரிப்பின் காரணமாக மற்றப் பிரதேசங்கள் அரிப்பிற்கு உட்பட்டு மலைகள் மாத்திரம் எஞ்சி இருப்பதால் இவ்வகையான இடங்கள் உருவாகி இருப்பதாகப் பலர் நம்புகின்றனர்.



## கெலபாகொஸ் தீவு


பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவே கெலபாகொஸ் தீவு. ஈக்குவடோர் நாட்டிற்குச் சொந்தமான கெலபாகொஸ் தீவில் வாழ்கின்ற மிருகங்களின் பரிணாம வளர்ச்சி தொடர்பான தகவல்களை இத்தீவில் ஆய்வுகளை செய்து அறியக் கூடியதாக உள்ளது.





## பாரிய கடல்வழி (கோஸ்வே)

நீரின் மீதுள்ள தரைப்பாதை ஆங்கிலத்தில் "கோஸ்வே" என்றழைக்கப் படுகின்றது. அயர்லாந்திற்கும் ஸ்கொட்லாந்திற்கும்



## கிராண்ட் கெனியன்

இவ்வகையான நிலத் தோற்றத்தை ஆழமான மண் அரிப்பு என்று குறிப்பிடுவர். அமெரிக்காவின் கொலராடோ நதியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிசயங்கள்




## பிரமாண்டமான சிக்வோயா மரம்

அமெரிக்காவில் காணக் கூடிய சிக்வோயா மரங்களில் பிரமாண்டமான மரமாக இதைக் குறிப்பிடலாம். இம் மரம் ஊசி இலைத் தாவர இனத்தைச் சேர்ந்ததாக இருப்பதுடன் இப் பிரமாண்டமான மரம் சிக்வோயா தேசிய பூங்காவில் உள்ளது. இது 84 மீற்றர் உயரமானது. இம்மரத்தின் சுற்றளவானது 111 மீற்றராகும். 1990ம் ஆண்டில் இம்மரம் 2500 மெட்றிக் தொன் என மதிப்பிட்டுள்ளனர்.



இடையில் இவ்வகையான பாரிய தரைப் பாதை ஒன்று காணப்படுகின்றது. இப்பாதை இயற்கையாகவே உருவாகியதாக இருந்தாலும், எரிமலைக் குழம்பான லாவா வெளியேறி நீரில் குளிர்வடைந்ததன் காரணமாக இப்படியான நிலத்தோற்றம் ஏற்பட்டிருக்கலாம் என ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.



செயற்பாடுகள் காரணமாகவே கிராண்ட் கெனியன் பாறைத் தொடர்கள் உருவாகியுள்ளன. கொலராடோ நதிப்பள்ளத் தாக்கில் 446 கிலோ மீற்றர் பிரதேசம் இவ்வகையான அரிப்பிற்கு உட்பட்டுள்ளது. இதன் அகலம் 29 கிலோ மீற்றராகும்.



## மிகப்பெரிய முருகைக்கற் பாறை

உலகின் மிகப்பெரிய முருகைக்கற் பாறைத் திணிவு அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ளது. அவுஸ்திரேலியாவின் கிழக்குக் கரை முழுதும் 2010 கிலோமீற்றர் நீளத்திற்கு இவ் முருகைக்கற் பாறைத் திணிவுகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக உலகில் அதிகமான உல்லாசப் பிரயாணிகள் கண்டு களிக்கும் முருகைக்கற் பாறைத் திணிவு இதுவே எனக் கூறலாம்.




## பைக்கால் ஏரி

பைக்கால் ஏரியே உலகின் மிக ஆழமான உவர் நீர் ஏரியாகும். இது ஆசியாவின் மூன்றாவது மிகப்பெரிய ஏரியாக உள்ளது. 300க்கு மேற்பட்ட ஆறு மற்றும் நீர் ஓட்டங்கள் இவ் ஏரிக்கு நீரை வழங்குகின்றன. இங்கு காணப்படும் தெளிவான நீர் காரணமாக அதிகமான உயிரினங்கள் இங்கு உயிர் வாழ்கின்றன.



## சுண்ணக் கல்

சுண்ணக் கல் எவ்விதம் புதுமையானது என நீங்கள் நினைக்கக் கூடும். சுண்ணக் கல் செய்யும் வேலைகளை நோக்கின் அதிசயமானது என்று கூறினால் பிழையில்லை. கடல் நீரின் செல்வாக்கின் காரணமாகச் சுண்ணக் கல் நீரில் உருவாகும்.



## மவுனா லோவா

உலகின் மிகப் பெரிய எரிமலையாக இது இருக்கின்றது. ஹவாய் தீவில் அமைந்துள்ள இந்த எரிமலை 13250 அடி உயரமுடையது.



## எவரெஸ்ட் மலைச் சிகரம்

தென் ஆசியாவிலுள்ள இயற்கை அதிசயங்களில் ஒன்றாக எவரெஸ்ட் மலைச் சிகரம் உள்ளது. இச்சிகரம் இமயமலைத் தொடரில் அமைந்துள்ளது. இச்சிகரம் 8850 மீற்றர் உயரமானது. நேபாளம், இந்தியா, சீனா என்பவற்றை இயற்கையாகவே பிரிக்கும் சுவராக எவரெஸ்ட் மலைச் சிகரம் உள்ளது. உலகின் உயர்ந்த மலைச் சிகரம் இதுவாகும்.

## சகாரா பாலைவனம்



வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள சகாரா பாலைவனம் உலகின் மிகப்பெரிய பாலைவனமாக உள்ளது. இப் பாலைவனத்தின் அகலம் 1,610 கிலோ மீற்றராகும். நீளம் 5,150 கிலோ மீற்றராகும். இப்பாலைவனத்தின் மொத்த நிலப்பரப்பு 91 மில்லியன் கிலோமீற்றராகும். இதில் 207,000 சதுர கிலோ மீற்றர் பாலைவனச் சோலையாக உள்ளது.



## விக்டோரியா நீர்வீழ்ச்சி

சாம்பியா நதியில் உற்பத்தியாகி வரும் விக்டோரியா நீர்வீழ்ச்சியே உலகின் மிக அழகான நீர் வீழ்ச்சி எனக் குறிப்பிடப்படுகின்றது. சாம்பியா மற்றும் சிம்பாவே நாடுகளுக்கிடையில் அமைந்துள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியிலிருந்து தெறித்துச் சிதறும் நீர்த்துளிகள் 110 மீற்றர் வரை பரவுகின்றது. இதன் காரணமாகவே உள்ளூர் வாசிகள் இந் நீர்வீழ்ச்சியைப் "புகை கக்கும் பிசாசு" என்று அழைப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவியற் கலசம்

அநு. வை. நாகராஜன்

அன்புச் செல்வங்களே!

கடந்த இதழில் எமது அறிவியற் கலசத்தில் "ஒலியும் சூழலை மாசு படுத்தும்" என்ற விடயத்தைப் பார்த்தோம்.

நீங்கள் அதைப் படித்துச் சுவைத்து இருப்பீர்கள் தானே? இந்த இதழில் வானில் வண்ண எழிலாய்ச் சொரியும் 'மத்தாப்பு' வாணம் பற்றிப் பார்ப்போம்.

இத் தகவல்களை, மத்தாப்பே தனது கதையாக உங்களுக்குச் சொல்லுகிறது. கதை என்றால் உங்களுக்கு மிகவும் பிடிக்கும். அப்படித் தானே? அதுவும், இக்கதை ஒரு சுயசரிதை. வரலாற்று ரீதியான உண்மைக் கதை. சரி, இனி மத்தாப்பின் கதையைக் கேட்போமே!

அநு. வை. நா.

## வண்ணப் பூச்சரமாய்ச் சொரியும் மத்தாப்பு

வானில் முத்துச் சரமாய்ச் சொரிந்து, உங்கள் கண்களையும் கருத்தையும் கவர்கின்றேனே நான் யார் தெரியுமா? நான் தான் சாட்சாத் மத்தாப்பு!

என் பூர்வீகம் மிகவும் கருகலாக இருக்கிறது. அது எனக்கு முழுமையாகத் தெரியாது. இருந்தாலும், ஆய்வாளர்கள் கருத்துப்படி என் வரலாற்றை - எனது மூதாதையர் பற்றிய தகவல்களை ஐரோப்பியர் அறிய முன்னர் அரேபியரும் இந்தியரும் ஓரளவு அறிந்து வைத்து இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு முன், நெடுங்காலத்துக்கு முன்னரே சீனர் எம்மைப் பற்றித் தெரிந்து, மிகவும் இரகசியமாக வைத்திருந்தார்களாம்! அந்த வகையில், சீனரே எம்மைத் தோற்றுவித்தவர்கள் என்று வரலாறு கூறுகிறது.

உலகின் பல முன்னோடிக் கண்டு பிடிப்புகளைக் கண்டு பிடித்தவர்கள் சீனர்களே என்பது மறுக்க முடியாத உண்மை!

அச்சுக் கலை, கடதாசி, திசையறி கருவி எனப் பலவற்றை உலகுக்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்களும் சீனரே!

கி.பி.13ம் நூற்றாண்டளவில், எம்மைப் பற்றிய இரகசியம் சிறுகச் சிறுக ஐரோப்பியருக்கும் ஏனையோருக்கும் தெரிய வந்ததன் பின்னரே நாம் வெளி உலகுக்கு அறிமுகம் ஆனோம். அதிலும், வெடி மருந்து எனும் எமது மூலக் கூறின் கண்டு பிடிப்புக்குப் பின்னரே எம்மினத்துக்குப் பேரும் புகழும் வந்தன என்றால் அது மிகை ஆகாது.

கி.பி.15ம் நூற்றாண்டில், ஐரோப்பியரின் அறிவுப் புரட்சி - அரசியற் புரட்சி - தொழிற் புரட்சி போன்ற தொடர் நிகழ்வுகள் காரணமாக மேற்கு நாட்டினர் கீழைத் தேச ஊடுருவலை முனைப்புடன் செய்தனர். அதே நேரம், கீழைத்தேச இரகசியங்கள் பல, நயமாகவும், கபடமாகவும் மேலைத் தேசத்தவர்களால் கவர்ந்து செல்லப்பட்டன.

அவ்வேளையில், எமது மூலக் கூறான வெடி மருந்தின் செய்முறை இரகசியங்களும் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த இரகசியத்தைப் பயன்படுத்த ஜேர்மன் நாட்டு அறிவியலாளர் ஒருவர் பரீட்சார்த்தமாக வெடி பொருள் ஒன்றினை 1846ம் ஆண்டு கண்டு பிடித்தார். அவர் 'நைட்றிக்' அமிலத்தைக் கந்தக அமிலத்திற் கலந்து பஞ்சு இழைகளை நனைத்தார். அதுவே வெடிப்பஞ்சு (Gun Cotton) எனப்பட்டது. இதனையே ஐரோப்பியர் முதன் முதலில் வெடி பொருளாக்கி வெடித்தனர். இதன் பின்னர், பஞ்சுக்குப் பதிலாக காகிதம் அல்லது மரத்தூள் போன்ற பொருள்களைப் பயன்படுத்தித் திருத்தமான வெடிகளாக எம்மூதாதையர் உருவாக்கினர்.

இதனையடுத்து, 1846லே இத்தாலியைச் சேர்ந்த ஒருவர் 'கிளிசரின்', 'நைட்றிக்' அமிலம் என்பனவற்றை நைட்றிக் கிளிசரின் என்ற கலவையாகத் தயாரித்துப் புதியரக வெடி ஒன்றைக் கண்டு பிடித்தார். ஜேர்மானியரின் முன்னைய வெடியிலும் சிறந்ததாக இது இருந்தது. இவ்வெடி, வெடிக்கும் போது தன்னளவில் 12,000 கன அளவு வாயுக்களைக் கொண்டு வெடித்தது. இக் கண்டு பிடிப்பும் தயாரிப்பும் எமது மூலப் பரிமாணத்தை விருத்தி செய்ததோடு உலகப் புகழையும் எமக்கு ஈட்டித்தந்தது. இது ஆரம்பத்தில் ஒரு வெடிபொருளாகத் தானிருந்தது. பின்னர் ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்குப் பின், மரத்தூள் அல்லது 'கிலீசெல்கர்' (Kleselghur) எனும் துணைப் பொருளுடன் முன்னைய பஞ்சுக் கலவையைக் கலந்து 'டைனமைட்' (Dynamite) குச்சிகள் என்ற பெயரோடு நாம் பாவனைக்கு வந்தோம். இதனைத் தயாரித்து வெளியிட்டவர் உலகப் பெயர் பெற்ற அல்பிரட் நோபெல் (Alfred Nobel) என்ற சுவீடன் நாட்டவராம். இவரின் தயாரிப்பே இன்றைய வெடி மருந்தின் மூலக் கூறாகக் கருதப் பெறுகிறது. இது நல்ல சீரான அமைப்பில் உருவாகி உள்ளது. இச்சீரமைப்பு இரண்டு வகையில் விசையுடன்



தொழிற்படுகிறது. ஒரு வகையில் அது, மிகவும் வன்மையான சக்தியைக் கொண்டு வெடிக்கும். அதாவது உயர் அழுத்தம் (High Explosive) உடையதாம். மற்றது உந்தித் தள்ளும் சக்தியைக் கொண்டு வெடிக்கும். இதனை 'பொறப்பளன்ட்ஸ்' (Propellants) என்பர். முன்னைய வெடியைக் கொண்டு பாறைகளைப் பிளக்கலாம். பின்னையதைப் பீரங்கி, துப்பாக்கி, றொக்கட் போன்றவற்றுக்குப் பயன்படுத்தலாம். இந்த மூலக் கூறில் பிறந்த உந்துவிசை விதியைப் பயன்படுத்தியே மத்தாப்பு எனும் நாம் உருவாக்கப்பட்டோம். முன்னாளில், எமது உடன் பிறப்புக்களாகத் துப்பாக்கிச் சுடுகணைகள், பீரங்கி போன்ற வெடிப் பொருள்களிலும் மத்தாப்பு என்று செல்லமாக நீங்கள் அழைக்கும் நாமே உங்கள் மத்தியில் மதிப்பும் செல்வாக்கும் பெற்று விளங்குகிறோம்.

நாம் எவ்வாறு உருவாகிறோம் என்பதையும் முதலிற் கூறுகிறோம். இருண்ட வானில் நீர் வீழ்ச்சி போலும் பூச்சரம் போலும் செறிந்து மிகவும் பிரகாசமாக ஒளித் திரள்களுடன் நாம் வானில் வெடித்துச் சிதறுவோம். அப்பொழுது, நாம் கண் கொள்ளாக் காட்சியாகக் காட்சி அளிப்போம். எம்மிற் சிலர் தீப்பொறி சிதறப் பலத்த ஓசையுடன் வெடிப்பார்கள். அதே போல வேறு சிலர் உயர உயரச் செல்வதோடு கண்ணைக் கவரும் பலவர்ண ஜால நட்சத்திரம் போல் உதிர்வார்கள். வர்ண வேடிக்கை செய்யும் வாணங்களே, நாங்கள்! எங்களை நீங்கள் மத்தாப்பு என்று செல்லமாக அழைப்பீர்கள்.

எம்மைத் தயாரிப்பதில் விசேஷ கவனமும், மூலப் பொருள்களும் தேவைப்படும். கந்தகக் கூழ், கரி, என்பவற்றோடு வெடியுப்பு எனப்படும் சல்பிரேட்டும் (Sulphurate) தேவைப்படும். இந்த வெடியுப்பையே பொட்டாசியம் நைட்ரேட் (Potassium Nitrate) என்று அழைப்பார்கள். இப்பொழுதெல்லாம் வெடியுப்புக்குப் பதிலாக பொட்டாசியம் குளோரைட் (Potassium Chloride) எனும் பொருளைப் பாவிக்கின்றார்கள்.

இந்தக் கலவையுடன் சில வகை உலோகத் தகடுகளின் சிறு துணிக்கைகளையும் சேர்ப்பார்கள். இச்சிறு துணிக்கைத் தூள்களே எமக்கு வர்ண ஒளியை ஊட்டுகின்றன. இக்கலவையை உரிய அளவுப்படி, சிறிய பெரிய காகிதக் குழாயுள் அடக்கிப் பொதியாக்குவார்கள். அதன் மறு பக்கத்தைக் களிமண்ணால் மூடி ஒரு துளையில் திரியையும் மேல் நோக்கி வைப்பார்கள். திரியில் தீ வைத்துக் கொளுத்த, அது வெடிக்கும். இதனையே நீங்கள் சாதாரண வெடி என்பீர்கள்.

ஆனால், எம் போன்ற மத்தாப்பு, சற்று வித்தியாசமான அமைப்பில் தயாரிக்கப் பெறுவோம். எமக்குத் திரியை அடியிலே பொருத்துவார்கள். இதில் தீயை வைக்கும் போது மருந்துக் கலவையில் அது பற்றி, அழுத்தம் மிகுந்த வாயுவை உண்டாக்கும். அந்த வாயு எமக்கடியில் இருக்கும் சிறிய துளைக்கு ஊடாக வெளிவர முயலும். அந்த நேரம் றொக்கட் போல், மேலே உந்தி வானுக்குக் கிளம்புவோம். அவ்வேளையில், கலவையில் இருக்கும் மருந்தின் அளவுக்கு ஏற்பவும், வெளி வரும் வாயுவின் வேகத்துக்குத் தக்கபடியும் நாம் மேலே மேலே செல்வோம். மருந்து முடியவும் வெடித்துச் சிதறவும் செய்வோம். அந்த நேரமே நாம் பூச்சரம் போல் சொரிந்து உங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து களிப்பூட்டுவோம்.


இது வேடிக்கை ஆகவும் விநோதமாகவும் இருக்கும் அல்லவா?

## கடலில் மார்க்கங்களை அறியும் வழிமுறை

கடல் வழி, வான் வழிப் பயணங்களின் போதும் நாம் செல்லும் மார்க்கத்தை அறிந்து கொள்வதென்பது கடினமான ஒரு பணியாகும்.

எனவே தான், இதனை இலகுபடுத்தும் விதமாகச் சிறப்பு வழிமுறையொன்று கையாளப்பட்டு வருகின்றது. இந்த வழிமுறையினை நவிகேஷன் (Navigation) என ஆங்கிலத்தில் அழைக்கின்றனர். இம்முறையின் மூலம் கடல், வான் வழிமட்டுமன்றி வளிமண்டலம் மற்றும் தரைப்பகுதிகளிலும் மார்க்கங்களை அறியமுடியும்.

ஆரம்ப காலத்தில் கிரேக்க, போர்த்துக்கல் போன்ற நாடுகளைச் சேர்ந்த மக்கள் வான் நட்சத்திரங்களைக் கொண்டே போக்குவரத்து மார்க்கங்களை அறிந்து கொண்டனர்.ஆனால் தற்காலத்தில், செயற்கைக் கோள்களிலிருந்து, நவீன தொழில்நுட்பமுறைகளில் இவை அறியப்படுகின்றன.



### புதிர்க் கவிதை விடைகள்

| | |
|---|---|
| 1. தலை மயிர் | 6. பொய் |
| 2. கழுமரம் | 7. மணவறை |
| 3. உலக்கை | 8. தண்ணீர் |
| 4. விண்மீன் | 9. சாவி |
| 5. தோணி | 10. கத்தரிக்கோல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்கல கலைப்பொருட்கள்





எமது எல்லாவிதமான சுப வைபவங்களிலும் குத்துவிளக்கு மிகவும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. எல்லா நல்ல காரியங்களின் போதும் குத்துவிளக்கேற்றப்படுகின்றது. இந்தக் குத்துவிளக்கு வெண்கலத்தால் ஆக்கப்பட்டதாகும். வெண்கலம் எமது நாட்டில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் இன்று முக்கியமானதொரு அலங்காரப் பொருளாகியிருக்கின்றது.

எமது நாட்டில் இவ்வெண்கலப் பொருட்கள் குறிப்பாக வெவ்வேறு விதமான அலங்கார வடிவங்களில் உற்பத்தி செய்யப்பட்டு உள்நாட்டுச் சந்தைகளை அலங்கரிப்பது போன்று வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

இத்தொழில் இலங்கையின் பிரதான சிங்கள பாரம்பரிய கைத்தொழிலாகும்.

மிருகங்களின் உருவங்கள், பறவைகளின் வடிவங்கள், மலர் வடிவங்கள் மற்றும் தரை, சுவர் அலங்கார வடிவங்கள் என்ற அடிப்படையில் இந்த வெண்கலப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இந்தக் கைத்தொழில்துறைக்கு பெயர்போன இடங்களாக - எமது நாட்டில் மலையகமான கண்டி மாவட்டத்தில் கண்டி, பிலிமத்தலாவை, தவ்யகலை, கலாபுரய, அரத்தன போன்ற பகுதிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இந்தக் கைத்தொழில் தொடர்பான தகவல்களைத் திரட்ட நாம் மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டபோது பெறப்பட்ட தகவல்களை கீழே தருகின்றோம்.

வெண்கலத்திற்கான மூலப்பொருளாகப் பித்தளை உலோகம் கொண்டு வரப்பட்டு அதிக உஸ்ணமேற்றப்பட்டு உருக்கப்படுகின்றது.

உருக்கப்பட்ட வெண்கலம் (பித்தளை) அதற்கென்று வெவ்வேறு உருவங்களில் வடிவமைக்கப்பட்ட, ஒரு வகை மண் அச்சுப் பெட்டிகளுக்குள் ஊற்றப்படுகின்றது.

அச்சுக்குள் இருந்து அகற்றப்பட்டு பல்வேறு வடிவமைப்புக்களில் அவை நன்கு துலக்கப்படுகின்றன. துலக்கப்படுவதோடு தேவையான கலை நுணுக்கத்துடனான அலங்காரமும் செய்யப்படுகின்றது.

அலங்காரம் அமைப்பது மிகவும் சிரமப்பட்டு நுணுக்கமாகச் செய்ய வேண்டிய ஒரு கருமமாகும். இதில் சூரியன், சந்திரன், மலர் என்பவற்றின் வடிவங்கள், மிருகங்களின் உருவங்கள், பறவைகளின் வடிவங்கள் என்பவற்றைச் சிலையில் செதுக்குவது போன்று வடிவமைப்பது மிகவும் அபூர்வமான ஒரு பணியாகவே அமைகின்றது.

இதற்கென்று நீண்டகால அனுபவம் பெற்ற சிற்பக் கலைஞர்களை ஒத்த, கலைஞர்களே ஈடுபடுகின்றனர்.


இவர்கள் பெரும்பாலும் பரம்பரை பரம்பரையாக இத்தொழிலில் ஈடுபட்டவர்களாகவே உள்ளனர்.

## வெண்கலம் வார்க்கும் அடுப்பு

இதற்கென விசேடமாக நிலத்திற்கு கீழ் அமைக்கப்பட்ட அடுப்பு காணப்படுகின்றது.

இந்த அடுப்பு சாதாரணமாக ஒன்றரை அடி ஆளமானதாகவும், சுற்றிலும் மண்ணால் மெழுகப்பட்டு சிலிண்டர் ஒன்றின் அமைப்பை ஒத்ததாகக்காணப்படுவது விசேட அம்சமாகும்.

அந்த குழிக்குள் ஒருபக்கத்தால் இரும்புக் குழாய் ஒன்று பொருத்தப்பட்டிருக்கின்றது. அந்தக் குழாய் ஊடாக அடுப்பு அணையாது எரியும் வகையில் காற்று ஊதப்படுகின்றது. நெருப்பு பற்றவைப்பதற்கு தேங்காய் சிரட்டைக் கரி மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.



வெண்கலத்திலான கலசம்

வெண்கலத்திற்கான உலோகம் பழுக்கக் காய்ச்சப்படும் போது அல்லது உருக்கப்படும் போது அதற்கென்று பயன்படுத்தும் உபகரணங்கள் சிலவும் உள்ளன.




வெண்கலம் தீயில் உருக்கப்படுகின்றது





அச்சுக்களுக்கு பயன்படும் கருவி

சூரியன், சந்திரன், மலர் என்பவற்றின் வடிவங்கள், மிருகங்களின் உருவங்கள், பறவைகளின் வடிவங்கள் என்பவற்றைச் சிலையில் செதுக்குவது போன்று வடிவமைப்பது மிகவும் அபூர்வமான ஒரு பணியாகவே அமைகின்றது



சதுர சட்டங்கள்

இறுதியாக நன்கு துலக்கப்பட்ட வெண்கலப் பொருட்கள் பளிச்சிடச்(மினுக்கி) செய்யப்பட கொரக்காய், புளி, எழுமிச்சை, போன்ற புளிப்பான சாறுகலந்த கலவை பயன்படுத்தப்பட்டு இறுதியாக துலக்கப்படுகின்றது.

இவ்வாறான வெண்கல உற்பத்தியின் போது நவீன மற்றும் மரபு ரீதியான தொழில் நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

வெண்கலம் கலக்கப்பட்ட உலோகம் செம்பு கலக்கப்பட்ட உலோகத்தைவிட மிகவும் கடினத் தன்மைவாய்ந்ததாகும். அதனால் இந்த வகை உலோகம் துருப்பிடிக்காத தன்மை வாய்ந்ததாகும்.

தலைநகரில் செல்வந்தர்கள் வாழும், உல்லாசப் பிரயாணிகள் நடமாடும் பல பகுதிகளில் தெருவோரங்களில் இந்த வெண்கல உற்பத்திகளை விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பதை தினமும் காணலாம்.

கண்டி மாநகரில் பல இடங்கள் இந்த வெண்கல உற்பத்திகளின் காட்சியகமாக காட்சியளித்து வருகின்றன.

இலங்கை வரும் மேற்கு நாட்டு உல்லாசப் பிரயாணிகளை இந்த வெண்கலத் தயாரிப்புக்கள் வெகுவாக கவர்ந்து வருவது அதன் தனிச்சிறப்பு காரணத்தினாலேயேயாகும்.





வெண்கலப் பொருட்களைத் தயாரிக்கப் பயன்படும் உபகரணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கல் - 2




## பிரதான நகரங்கள்

போர்த்துக்கல் நாட்டின் தலைநகரம் லிஸ்பன். இங்கு 2001ம் ஆண்டின் மொத்தச் சனத்தொகை 564,657 ஆகக் காணப்பட்டது. நாட்டின் மிக முக்கிய வர்த்தக, நிர்வாக மையமாக லிஸ்பன் நகர் உள்ளது. நாட்டின் பிரதான துறைமுகம் கூட லிஸ்பன் நகரிலேயே உள்ளது. போர்ட்டோ போர்த்துக்கலின் இரண்டாவது பிரதான நகரமாகும். இங்கு மொத்தச் சனத்தொகை 263,131 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் வர்த்தக நிர்வாக மையமாக லிஸ்பன் நகரம் இருப்பது போன்று பிரதான கைத்தொழில் நகரமாக போர்ட்டோ விளங்குகின்றது. கோயிம்ரா கல்வி தொடர்பான மத்திய நிலையமாக உள்ளது.

## சமூக நிலையும் வாழ்க்கை முறையும்

20ம் நூற்றாண்டில் போர்த்துக்கல் நாட்டின் சமூக நிலையை நோக்கும் போது அநேகமானோர் உயர் செல்வந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாகவே இருந்தனர். இவர்கள் பெரிய நிலப்பிரபுக்களுக்குச் சொந்தக் காரராக இருந்தனர். இந்நிலையில் செல்வந்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்க மறுபுறம் வறியோரின் தொகையும் அதிகரிக்கத் தொடங்கியது. 1974ம் ஆண்டில் ஏற்பட்ட புரட்சி யின்பின் சமுதாய நிலை மாற்றமடைந்து பிரபுத்துவ அதிகாரமானது பலரிடம் பிரிந்துசென்றது. புதிதாகக் குடியேறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கச் செல்வந்தரிடமிருந்து நிர்வாகமானது பகிர்ந்து கொடுக்கப்பட்டது.

1990ம் ஆண்டின் பின்னர் மத்தியதர வர்க்கத்தினரின் தோற்றத்துடன் இதுவரை காலம் இருந்து வந்த முறை மாற்றமடையத் தொடங்கியது. இவற்றுடன் போர்த்துக்கல் நாட்டின் வாழ்க்கை முறையும் மிகவிரைவில் மாற்றமடையத் தொடங்கியது. கிராமப்புறங்களில் வாழ்ந்த மக்கள் நகரங்களை நோக்கி வந்தனர். இதன் காரணமாக லிஸ்பன் மற்றும் போர்ட்டோ நகரில் சனத்தொகை அதிகரித்தது. ஆனால் அதிகமானவர்கள் தொடர்ந்தும் கிராமப்புறங்களில் தமது சொந்தத் தொழில்களான விவசாயத்தையும் கைத்தொழிலையும் செய்து வாழ்ந்து வந்தனர்.

பெரும்பாலும் உரோமன் கத்தோலிக்க சமய விழாக்களே போர்த்துக்கல் நாட்டில் நடைபெறுகின்றன. இவற்றுள் ரோமாரிஸ் என்று அழைக்கப்படும் விழாவானது பிரசித்தி பெற்றது. போர்த்துக்கல் நாட்டு மக்கள் கால்பந்து விளையாடுவதற்கு அதிக விருப்புடையவர்கள். இவர்களின் திறமை 2002ம் ஆண்டில் நடைபெற்ற, உலக கால்பந்துப் போட்டியின் போது வெளிக்காட்டப்பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும். இவற்றை விடக் காளை மாட்டுச் சண்டையானது போர்த்துக்கல் நாட்டின் பிரசித்தி பெற்ற விளையாட்டாக உள்ளது.

## கலாசாரம்

போர்த்துக்கல் மிகப் பெரிய கலாசார பாரம்பரியத்தைக் கொண்ட நாடாகும். உரோம, விசிகோத், இஸ்லாம் என்பவற்றின் கலாசாரப் பண்புகள் போர்த்துக்கல் நாட்டின் சமூகத்தில் கலந்துள்ளன. இவர்களின் இலக்கியம் மற்றும் சித்திரப் படைப்புக்கள் 16ம் நூற்றாண்டில் மிகப் பிரசித்தி பெற்றவையாக அமைந்தன.

12ம் நூற்றாண்டு தொடக்கம் நாடக மற்றும் இலக்கியப் படைப்புக்கள் ஆகியன போர்த்துக்கல் நாட்டில் பிரசித்தி பெற்றவைகளாக இருந்தன.

போர்த்துக்கல் நாட்டின் கைப்பணிப் பொருட்களின் பாரம்பரியம் 6000 ஆண்டுகால பழைமை வாய்ந்தவை. கைப்பணிப் பொருட்களின் படைப்புக்களின் ஆரம்பத்தை ஐரோப்பாவில் போர்த்துக்கலில் தான் முதன் முதல் காணலாம். இந்நிலையில் சித்திர மற்றும் செதுக்கல் கலையானது இங்கு 12ம் நூற்றாண்டு முதல் வளர்ச்சியடைந்திருந்தது.

போர்த்துக்கல் நாட்டின் சங்கீதக் கலை உலகப் பிரசித்தி பெற்றது. போர்த்துக்கேய நாடுகாண் பயணிகளின் பிரயாணம் காரணமாக உலகம் பூராவிலும் உள்ள கலாசாரப் பண்புகள் போர்த்துக்கேய நாட்டில் பரவியதோடு, போர்த்துக்கேய கலாசாரம் ஏனைய உலக நாடுகளிலும் பரவியது. 1505ம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்ததை அடுத்து போர்த்துக்கேயரின் சங்கீதக் கலை இலங்கை மக்களிடையே பரவத் தொடங்கியது. லிஸ்பன் நகரானது போர்த்துக்கேயச் சங்கீதத்தின் கேந்திர நிலையமாக இருந்தது.

## பொருளாதாரம்

1970ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஏற்பட்ட புரட்சியின் பின் போர்த்துக்கல் நாட்டில் இதுவரை காலமும் இருந்த பொருளாதார முறையானது முழுமையாக மாற்றமடைந்தது. ஆனால் இன்றுவரை மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் பார்க்குபோது போர்த்துக்கல் நாட்டின் வளர்ச்சி கீழ் மட்டத்திலேயே உள்ளது. 1986ம் ஆண்டு போர்த்துக்கல் ஐரோப்பிய சங்கத்தில் சேர்ந்ததுடன், இந்நாட்டிற்குத் தேவையான உதவிகள் கிடைக்கப்பெற்றன.



புரட்சிக்கு முன்னர் போர்த்துக்கல் நாட்டில் விவசாயப் பொருளாதார முறையே காணப்பட்டது. புரட்சியின் பின்னர் வந்த ஆட்சியாளர்கள் நிலச்சுவாந்தர்களிடம் இருந்து நிலங்களைப் பெற்றுக் கூட்டு விவசாய நிலங்களை உண்டாக்கினர். அதன் பின்னர் போர்த்துக்கல் நாடானது வளர்ச்சி பெறத்தொடங்கியது.

- தேறிய உள்நாட்டு உற்பத்தி - பில்லியன் டொலர் 182
- தேறிய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி - 0.8%வீதம்
- தனிநபர் வருமானம் - 18,000 டொலர்
- தொழிலாளர்களின் எண்ணிக்கை - 5.1 மில்லியன் (2000இல்)
- வேலையற்றோர் - 4.5%வீதம்

- பிரதான கைத்தொழில் - நெசவு, பாதணிகள், மரத்தளபாடங்கள், கடதாசி, நிலக்கரி, வெண்கல உபகரணங்கள், எண்ணெய், இரசாயன பொருட்கள், மீன்பிடித்தொழில், வைன் உற்பத்தி, உல்லாசப் பிரயாணத் தொழில்
- கைத்தொழில் வளர்ச்சி - 1.5சதவீதம்
- விவசாய உற்பத்திகள் - உருளைக் கிழங்கு, தானியங்கள், ஒலிவ், இறைச்சி (ஆடு, செம்மறியாடு, கோழி, மாடு) மற்றும் பாலுற்பத்தி.
- ஏற்றுமதிப் பெறுமதி - 25.9 மில்லியன் டொலர் (2001இல்)
- ஏற்றுமதிப் பொருட்கள் - நெசவு மற்றும் சப்பாத்துக்கள், இயந்திர சாதனங்கள், இரசாயனப் பொருட்கள், நிலக்கரி மற்றும் கடதாசி
- ஏற்றுமதி செய்யும் நாடுகள் - ஐரோப்பிய சங்கம், ஐக்கிய அமெரிக்க நாடுகள்
- இறக்குமதிப் பெறுமதி - 39 மில்லியன் டொலர்
- இறக்குமதிப் பொருட்கள் - இயந்திர சாதனங்கள், இரசாயனப் பொருட்கள், பெற்றோலியம், விவசாய உபகரணங்கள்
- இறக்குமதி செய்யும் நாடுகள் - ஐரோப்பிய சங்கம், ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஜப்பான்.
- நாணயம் - யூரோ (Euro), (PTE) போர்த்துக்கேய எஸ்குடா

## போக்குவரத்தும் மற்றும் தொடர்பு சாதனங்களும்

ஆரம்ப காலத்தில் போர்த்துக்கல் நாட்டில் விருத்தியடைந்த போக்குவரத்து அமைப்பு ஒன்று காணப்படவில்லை. இது நாட்டின் புற அமைப்பின் விருத்திக்குத் தடையாக அமைந்தது. இதுவரை ஐரோப்பிய சங்கத்தின் உதவியுடன் அதிகமான போக்குவரத்துப் பாதைகள் விருத்தி செய்யப்பட்டுள்ளன. இன்று 68,732 கிலோமீற்றர் நீண்ட போக்குவரத்து அமைப்பொன்று போர்த்துக்கல் நாட்டில் காணப்படுகின்றது. 1000 பேரில் 321 பேருக்கு மோட்டார் வாகனமொன்று சொந்தமாக உள்ளது. 2,814 கிலோமீற்றர் நீளமான புகையிரத பாதையமைப்பும் இந்நாட்டில் காணப்படுகின்றது. வர்த்தகத்திற்காக இன்று 325 கப்பல்களைப் பயன்படுத்துகின்றது. பிரதான துறைமுகம் லிஸ்பன் நகரில் அமைந்துள்ளது. உள்ளூர், மற்றும் வெளியூரிற்கான விமானச் சேவைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

போர்த்துக்கல் நாட்டில் 31 தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. 1000 பேருக்கு 306 வானொலிகளும், 638 தொலைக்காட்சிப் பெட்டிகளும், 427 தொலைபேசிகளும் உள்ளன.

## நிர்வாகம்

1982ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டமானது, அதுவரை காலமுமிருந்த குழப்பமான சூழ்நிலையை முடிவிற்குக் கொண்டுவந்தது. அதன் பின்பு சிறந்த சமுதாயம் ஒன்றைக் கட்டியெழுப்பும் பணியில் அரசு தொடர்ந்து பணியாற்றியது. பின்னர் 1989ம் ஆண்டு அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து 1992ம் ஆண்டில் மீண்டும் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட்டது. நாட்டின் நிர்வாக அதிகாரமானது ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டது.

ஜனாதிபதி மக்களின் வாக்குரிமையின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டு 5 வருட காலம் நாட்டின் தலைவராகக் கடமையாற்றலாம். பிரதமரைத் தெரிவு செய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

அரசியலமைப்புச் சட்டப்படி மக்கள் பிரதிநிதிகளின் மொத்தத் தொகை 230 ஆகும். இவர்கள் 4 வருடகாலத்திற்கு மக்கள் வாக்குரிமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

போர்த்துக்கல் நாட்டின் பிரதான நீதிமன்றமாக உயர் நீதிமன்றத்தைக் குறிப்பிடலாம். அவற்றின் கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் நான்கும், மாகாண மற்றும் மாவட்ட நீதிமன்றங்களும் காணப்படுகின்றன.

## பாதுகாப்பு

நேட்டோ அமைப்பின் அங்கத்துவ நாடான போர்த்துக்கல் சிறந்த பயிற்சியையும், ஆயுதங்களையும் கொண்ட இராணுவத்தைக் கொண்டுள்ளது. இந்நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் 4 மாதம் முதல் 18 மாதம் வரை கட்டாய இராணுவப் பயிற்சியைப் பெற வேண்டும். 2001ம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டின் மொத்த இராணுவ வீரர்களின் தொகை 43,600 பேராகக் காணப்பட்டது.

- எஸ். கிறேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாயைத் திறக்காதே

"நரி நண்பா, என்னை இலகுவில் கடித்துத் தின்றுவிடலாம் என்று எண்ணிவிடாதே. எனது தசைகள் நீரில்லாமல் கல்லாக இறுகிப் போய்விட்டன. என்னை நீ சாப்பிட வேண்டு மானால் அருகிலிருக்கும் குளத்திற்கு எடுத்துச் சென்று தண்ணீரில் நன்கு ஊறவைக்க வேண்டும்"

சில காலத்துக்கு முன்பு ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஒரு குளத்தருகே இரண்டு நாரைகள் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்தன. அந்தக் குளத்தில் மீன்கள் பெருகி இருந்ததால் அவைக்கு உணவுப் பஞ்சம் இருக்கவில்லை. அங்கு வாழ்ந்த ஆண் நாரையின் பெயர் 'குக்கூ' என்றும், பெண் நாரையின் பெயர் "கிக்கீ" என்றும் அழைக்கப்பட்டன. அக்குளத்தில் இருந்த சேற்றுப் புறத்தில் 'சுக்கா' என்ற ஆமை ஒன்றும் வசித்து வந்தது.

தொடர்ச்சியாகச் சுமார் ஒரு வருடகாலமாக அக்குளம் இருந்த பிரதேசத்தில் மழை பெய்யவில்லை. குளம் வற்றிச் சிறியதாகிப் போனது. வாழ்ந்திருந்த மீனினமும் குறைந்து போயின. இறுதியில் மிச்சமிருந்த நீரும் வற்றிக் குளம் முற்றாக வரண்டு போய்விட்ட்து. நாரைகளான குக்குவுக்கும், கிக்கீயிக்கும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. குளத்தருகே சேற்று நிலமும் காய்ந்து போய்விட்டதால் ஆமையான சுக்குவுக்கும் வாழ்வது சிரமமாகிவிட்டது.

இனிமேல் அங்கிருப்பதில் பலனில்லை என்று தீர்மானித்த குக்கூவும் கிக்கீயும் வேறெங்காவது நல்ல நீரும், நிறைய மீன்களும் இருக்கும் ஏரி, குளம் ஒன்றைத் தேடிப் போவதென்று பேசிமுடிவெடுத்தன. அதன் பிரகாரம் பிரயாணத்துக்குத் தேவையான ஆயத்தங்களைச் செய்ய ஆரம்பித்தன.

அவற்றின் பேச்சைச் செவி மடுத்த ஆமை பெரிதும் விசனமடைந்தது. அவர்கள் தன்னையும் அழைத்துச் செல்லமாட்டார்களா? என்று பெருமூச்சுவிட்டது. பின் அவர்களிடம் போய்க்கேட்டது.


"அன்புள்ள நாரைகளே! இந்த நீரும், சேறும் அற்ற குளத்தில் என்னைமட்டும் விட்டு விட்டுச் சென்று விடாதீர்கள். இனிமேலும் இங்கிருந்தால் நான் இறந்து போய்விடுவேன். என்னையும் உங்களுடன் அழைத்துச் சென்றுவிடுங்கள்" என்று வினயத்துடன் கேட்டது.

இரக்கமனம் கொண்ட நாரைகளும் ஆமையின் கோரிக்கைக்கு ஒப்புக் கொண்டன. அவை நீண்டதும், மெல்லியதுமான தடியொன்றை எடுத்து வந்து, சுக்கா ஆமையிடம் கூறின :

"உனக்கு உன் உயிர்மீது ஆசையிருந்தால் இந்த தடியை இறுக்கமாக கௌவிக்கொள். எந்தக் காரணத்தைக் கொண்டும் வாயைத் திறக்கக் கூடாது. நாங்கள் இருவரும் தடியின் ஒவ்வொரு முனையையும் கௌவிக் கொண்டு இன்னொரு குளத்திற்கு செல்லும்வரை நீ பொறுமையாக இருக்கவேண்டும்." இவ்வாறு குக்கூ நாரையும் கிக்கீ நாரையும் சுக்கா ஆமைக்கு உறுதியாக எடுத்துக் கூறின.

சுக்கா ஆமை நாரைகளுக்கு நன்றி தெரிவித்து, நாரைகள் கூறியபடி தடியை நன்கு கௌவிப் பிடித்துக் கொண்டது. நாரைகளும் தடியின் ஒவ்வொரு முனையையும் பற்றிப் பிடித்தபடி வானத்தில் எழுந்து இன்னொரு குளம் நோக்கி உயரப் பறந்து சென்றன.

இவ்வாறு சுக்கா ஆமையுடன் குக்கூவும், கிக்கீயும் உயரப் பறந்து செல்லும் அபூர்வக் காட்சியினை மிகப் பசியுடன் இருந்த "ஜெக்கோல்" நரி கண்டது. அது நாரைகளிடம் சத்தமிட்டுக் கூறியது, "இந்த கரைச்சல் பிடித்த ஆமையைக் கூட்டிக் கொண்டு எங்கே செல்கிறீர்கள்?" என்று அது கேட்டது. இதனைச் செவிமடுத்த சுக்கா ஆமைக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. தன்னைக் "கரைச்சல் காரன்" என்று குறிப்பிட்டதை சுக்காவால் கொஞ்சம் கூடப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அது நாரைகள் அறிவுறுத்தி இருந்த ஆலோசனையை மறந்து, ஜெக்கோல் நரிக்கு நன்கு



உறைக்கும் படி நாலு வார்த்தை பேசிவிட வேண்டுமென நினைத்தது.

"குள்ள நரிக்கு நல்லதொரு பாடம் புகட்டுவதற்காகவே என்னை அவை அழைத்துச் செல்கின்றன" என்று அது சத்தம் போட்டு கூறுவதற்காக தன் வாயைத் திறந்தது. உடனே தடியிலிருந்து விடுபட்ட ஆமை ஆகாயத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட கல்போன்று கீழ் நோக்கி வீழ்ந்தது. அதையறியாத நாரைகள் பறந்துசென்றுவிட்டன.

மிகுந்த பசியுடனிருந்த ஜெக்கோல் நரி மகிழ்ச்சியடைந்தது. வானத்திலிருந்து வீழ்ந்த ஆமை தனக்கு நல்ல விருந்தாக இருக்கும் என்று நினைத்தது. வானத்திலிருந்து வீழ்ந்ததால் பயந்து போயிருந்த ஆமை அதிர்ச்சியிலிருந்து மீண்டிருந்தது. ஜெக்கோல் நரி தன்னருகில் வந்ததும் நடுங்கிப் போய்விட்ட ஆமை தன் தலை, கால்கள், வால் என்பவற்றைத் தன் ஓட்டிற்குள் இழுத்துக் கொண்டு பாறாங்கல் போல் ஆடாமல் அசையாமல் கிடந்தது.

பசியுடன் இருந்த நரி, ஆமையை மேலும் கீழும் புரட்டிப் புரட்டி கடித்துப் பார்த்தது. ஆனால் அதன் பற்கள் வலியெடுத்தனவே தவிர அதனால் ஆமையைக் கடித்துத் தின்ன முடியவில்லை. நரியால் கடிக்க முடியாதபடி சுக்காவின் ஓடு மிகக் கடினமானதாக இருந்தது. இதனை உணர்ந்து கொண்ட ஆமை சற்றே எட்டிப் பார்த்து "நரி நண்பா, என்னை இலகுவில் கடித்து தின்றுவிடலாம் என்று எண்ணிவிடாதே. எனது தசைகள் நீரில்லாமல் கல்லாக இறுகிப் போய்விட்டன. என்னை நீ சாப்பிட வேண்டு



மானால் அருகிலிருக்கும் குளத்திற்கு எடுத்துச் சென்று தண்ணீரில் நன்கு ஊறவைக்க வேண்டும்." எனச் சொன்னது.

பசியால் வாடிப் போயிருந்த நரிக்கு இந்த யோசனை நல்லதாகப் பட்டது. தன் வாயால் ஆமையைக் கௌவிக் கொண்ட நரி ஒரே ஓட்டமாக அருகிலிருந்த குளத்தை நோக்கி ஓடியது. குளத்தையடைந்த நரி மெதுவாக ஆமையை நீரில் விட்டது. ஆனால் ஆமை ஓடிவிடாமல் இருப்பதற்காகத் தன் முன்னங்கால் ஒன்றால் ஆமையின் முதுகை அழுத்திப் பிடித்துக் கொண்டது. இதனால் நொந்துபோன ஆமை சிறிது நேரத்தில் மீண்டும் எட்டிப் பார்த்து நரியிடம் கூறியது, "நண்பா நரியே! நான் இப்போது முற்றிலும் ஊறிப் போய் என் தசைகள் மெதுவாகிப் போய்விட்டன. ஆனால் நீ கால் வைத்திருக்கும் இடத்தில் மாத்திரம் என் தசைகள் இளகவில்லை" என்று கூறியது. தனது முன்னங்காலுக்கடியில் ஆமையின் ஓடு இன்னும் கடினமானதாகவே இருப்பதை உணர்ந்த நரி சுக்கா ஆமை சொல்வதில் உண்மை இருக்கின்றதென நினைத்துத் தன் முன்னங்காலை எடுத்துக் கொண்டது. இத்தருணத்தை எதிர்பார்த்திருந்த சுக்கா ஆமை கண்ணிமைக்கும் நேரத்தில் நீருக்கடியில் நீந்திச் சென்றுவிட்டது.

ஏமாற்றமடைந்த ஜெக்கோல் நரி முன்பை விட மேலும் பசி அதிகரிக்க நீண்டகொட்டாவி ஒன்றைவிட்டது. எல்லோரும் எல்லாக் காலத்திலும் எல்லாரையும் ஏமாற்றிவிடமுடியாது!

எஸ். தன்ரக்ஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவி வெப்பமடைவதா

புவிக்கோளத்தின் வெப்பநிலையானது அதிகரித்துச் செல்வதன் காரணமாக உலகில் மிகப் பெரிய சேதங்கள் ஏற்படலாம் என அடிக்கடி கூறப்பட்டு வருகின்றது. இதனைத் தடுத்து நிறுத்த விஞ்ஞானிகள் முயற்சித்த போதும் நாளுக்கு நாள் புவியின் வெப்பநிலை அதிகரித்தே செல்கின்றது. வெப்பநிலை அதிகரிப்பதைத் தற்போது கட்டுப்படுத்த முடியாமலுள்ளதாக ஒரு சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புவிக்கோளத்தின் வெப்பநிலையானது அதிகரித்து வருவதன் காரணமாக, 2050 ம் ஆண்டளவில் இற்றை வரை புவியில் வாழ்ந்து வந்த உயிரினங்களில் அதிகமானவை அழிந்து விடும் என புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன. அவ்வாறே அதிக எண்ணிக்கையான தாவரங்களும் அழிந்து விடும். வாயுக் கோளத்தில் காபன்டையொக்சைட்டின் அளவு அதிகரித்தல் மற்றும் ஏனைய வாயுக்களின் அளவு அதிகரித்து, வளியுடன் சேர்ந்து, வளிக்கோளத்தில் அதிகரித்தமையால் அதிகளவிலான அழிவுகள் ஏற்படும் எனக் கூறப்படுகின்றது.

**புவிக் கோளத்தின் வெப்பநிலையானது அதிகரித்து வருவதன் காரணமாக, 2050ம் ஆண்டளவில், இற்றைவரை புவியில் வாழ்ந்து வந்த உயிரினங்களில் அதிகமானவை அழிந்துவிடும் எனப் புதிய தகவல்கள் தெரிவிக்கின்றன.**

புவி வெப்பம் அதிகரித்துச் செல்வதன் காரணமாக உலகில் அளவிடமுடியாத சேதங்கள் ஏற்படலாம் எனப் பிரித்தானிய லீட்ஸ் பல்கலைக்கழக உயிரினவியல் விஞ்ஞானியான கிறிஸ்தோமஸ் குறிப்பிடுகின்றார்.

உயிரியல் வேறுபாட்டினடிப்படையில், உலகின் மிகப் பொருத்தமானவை எனக் கருதப்படும் 6 பிரதேசங்களை அடிப்படையாக வைத்து, வெவ்வேறாக ஆய்வுகள் நடாத்தப்பட்டன. இவ் ஆய்வின் பெறுபேறாகவே இந்த விடயங்கள் அறியக் கிடைக்கப் பெற்றன. இந்த ஆய்விற்கு உலகின் 20சத வீதமான நிலப்பரப்பே உட்படுத்தப்பட்டது. இதனால் இந்த அறிக்கையின் உண்மை நிலை பற்றி எவரும் சந்தேகிக்க அவசியமில்லை என்றே பலரும் குறிப்பிடுகின்றனர்.

இந்த அறிக்கையின் படி புவி வெப்பம், அதிகரித்துச் செல்வதன் காரணமாக இன்று உயிரினங்களில் பல, தமது அன்றாட நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி உள்ளன என்று கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக இவற்றின் இனப் பெருக்கம் விரைவாகக் குறைந்து செல்கின்றது. இனப் பெருக்க வீதம் குறைவாகக் காணப்படும். உயிரினங்களை வெவ்வேறாக ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட பின்பே இத்தகைய முடிவிற்கு வந்துள்ளனர்.

## அழிந்து செல்லும் அளவு

இந்த அறிக்கையைத் தயாரிப்பதற்காக முக்கியமான 1103 உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஊர்வன, பறவைகள், பாம்புகள், தவளைகள், வண்ணத்துப் பூச்சிகள் மற்றும் முள்ளந்தண்டுள்ள விலங்குகள் என்பன இந்த ஆய்விற்கு உட்படுத்தப்பட்டன. இந்த ஆய்வினடிப்படையில், 2050 ம் ஆண்டளவில் ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட முக்கிய உயிரினங்களில் 15வீதத்திற்கும் 37வீதத்திற்கும் இடையிலானவை, இப்புவியிலிருந்து அழிந்து போய் விடலாம் என நம்பப்படுகின்றது. இன்று உலகில் மில்லியன் கணக்கான உயிரினங்கள் வாழ்வதாக மதிப்பிடப்படுகின்றது. இது தொடர்பாக வாஷிங்டனிலுள்ள பிரயோக விஞ்ஞான மத்திய நிலையத்தின் வானிலை எதிர்வு கூறல் தொடர்பான உயிரியல் விஞ்ஞானியான லீ அனான் என்பவர் கருத்துத் தெரிவிக்கும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இதனை விட அதிக எண்ணிக்கையான உயிரினங்களைப் பற்றி, தேடி ஆய்வு செய்திருந்தால் இதைவிட சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருக்கலாம். எப்படி இருந்த போதும் இன்று கிடைத்த பெறுபேறுகளை நோக்கின் அழியும் உயிரினங்களின் வீதமானது அதிகரிக்குமே ஒழிய, இதைவிடக் குறையாது".

மேற்படி விடயம் தொடர்பாகப் பல விஞ்ஞானிகள், வெளியேற்றப்படும் வாயுக்களின் வீதத்தைக் குறைத்தால், அழியும் உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் அளவைக் குறைத்து, அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக எடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளை விரைவில் எடுத்தால் அழியும் உயிரினம் மற்றும் தாவரங்களின் அளவைக் குறைக்கலாம் என நம்புகின்றனர்.

## காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள்

எதிர்காலத்தில், உலகின் காலநிலையானது எவ்விதமாக மாற்றமடையலாம் எனக் கருத்துத் தெரிவிக்கும் விஞ்ஞானிகள் இற்றைவரை எவ்விதம் காலநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன போன்ற விபரங்களைச் சேகரித்துள்ளனர். 2050 ஆண்டளவில் புவியின் வெப்பமானது 0.8 செல்சியசிலிருந்து 2 செல்சியஸ் வரை அதிகரித்துச் செல்லக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக 2001ம் ஆண்டளவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஒரு சில விஞ்ஞானிகள் இவ் வெப்பமானது இன்னும் அதிகரித்துச் செல்லலாம் எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதனால் 2040ம் ஆண்டிலிருந்து 2100ஆம் ஆண்டு வரை உள்ள காலப்பகுதியில் இப் பூமியின் மீதுள்ள உயிரினங்கள் மற்றும் தாவரங்களின் பெரும் பங்கு அழிந்து விடலாம் என நம்பப்படுகின்றது.



## அழிவைக் குறைத்தல்

இப்பூமியிலிருந்து மிக விரைவில் அழிந்து செல்லும் உயிரினங்கள் மற்றும் தாவரங்கள் தொடர்பாக ஆய்வினை மேற் கொண்ட விஞ்ஞானிகள் இற்றை வரை காலநிலையில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் மற்றும் உயிரினங்களின் அழிவிற்கும் இடையிலான தொடர்பு யாது? என ஆராய்ந்து வருகின்றனர்.

**காலநிலையில் மாற்றங்கள் ஏற்படுமிடத்து, அப்பிரதேசத்தை விட்டு இடம்பெயர்ந்து இன்னுமொரு பிரதேசத்திற்குச் செல்ல முடியாதா? என்ற விடயம் தொடர்பாக ஆய்வாளர்கள் கூடிய கவனத்தைச் செலுத்தி வருகின்றனர்.**

இது தொடர்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலையில் மாற்றங்கள் ஏற்படும் போது அப்பிரதேசத்தில் வாழும் மிருகங்களால் இடம் பெயர்ந்து இன்னுமொரு பிரதேசத்திற்குச் செல்ல முடியாதா? என்ற கேள்வி தொடர்பாக இன்று பலரின் அவதானம் திரும்பியுள்ளது. இதனடிப்படையில் காலநிலை மாற்றத்திற்கேற்ப இடம் பெயர்ந்து செல்லக் கூடிய, இடம் பெயர்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் அழியும் உயிரினங்கள்







ந்து செல்லமுடியாத காலநிலை மாற்றங்களால், அழிந்து செல்லும் தாவரம், மற்றும் உயிரினங்களை இனங்காணுதல், காலநிலை வேறுபாடுகளுக்கேற்ப இசைவாக்கம் பெற்று வாழும் தாவரம் மற்றும் உயிரினங்கள் தொடர் பாகவும் ...ன்று விஞ்ஞானிகள் கூடிய அக்கறை காட்டி வருகின்றனர்.

இன்று அழியும் நிலையிலுள்ள அதிகமான உயிரினங்களே 2050ம் ஆண்டளவில் முதலில் அழிவடையும் என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். காலநிலை மாற்றத்திற்கேற்பத் தமது வாழிடத்தை மாற்றக் கூடிய அளவில் இந்த உயிரினங்கள் பழக்கப்படவில்லை. இவ்விடயமாக அவசர நடவடிக்கைகளை எடுப்பது சிறந்தது என இவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். இந்த உயிரினங்களின் அழிவின் காரணமாக புவியில் ஏற்படும் அசாதாரண நிலையால் மனிதன் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என இவ் விஞ்ஞானிகள் மேலும் எதிர்வு கூறியுள்ளனர்.

தாவரங்கள் மற்றும் உயிரினங்களின் அழிவு அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என ஐக்கிய நாடுகள் சபையின் சூழல் நிகழ்ச்சித் திட்டப் பேராசிரியர் க்ளூஸ் டோபர் கருத்து தெரிவித்துள்ளார். இதனால் எவ்விதமாவது அழியும் உயிரினங்கள் மற்றும் தாவரங்களைக் கட்டாயம் காப்பாற்றியே ஆகவேண்டும் என விஞ்ஞானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## அழிந்து செல்லும் உயிரினங்கள் எவை?

இன்று உலகில் பல புகழ்பெற்ற உயிரினங்களும் தாவரங்களும் அழிந்து செல்லும் நிலையில் உள்ளன. இவற்றில் அவுஸ்திரேலியாவில் பொயிடிஸ் வன ஓணான் வகைகள் பிரதான இடத்தை வகிக்கின்றன. இன்று இவ் வகை ஓணான்கள் 20 வீதமே உள்ளன. காலநிலை மாற்றங்களால் இவ்வகை ஓணான்கள் அழிந்து செல்லும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. தென் ஆபிரிக்காவின் தேசிய மலரான கிங் புரோடி என்றழைக்கப்படும் மலர் இனம் மற்றும் அம்மலரின் இனத்தைச் சேர்ந்த பிரோலா செபிபெரா என்ற மலரும் 2050ம் ஆண்டளவில் முழுமையாக அழிந்துவிடக் கூடிய நிலையில் உள்ளன. ஆய்வினை மேற்கொண்ட ஆய்வாளர்கள் பூகோளவலய ரீதியில் இத்தகைய நிலை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

## அவுஸ்திரேலியா

அவுஸ்ரேலியாக் கண்டத்திலுள்ள 400 வகையான வண்ணத்துப் பூச்சிகள் காலநிலை மாற்றத்தால் அழியக் கூடிய நிலையில் உள்ளன.

இன்று ஒரேஞ் - வைட் - ஸ்பொட் ஸ்கிபர் மற்றும் வெஸ்டர்ன் ஜுவல் போன்ற உயிரினங்களில் 90 வீதம் அழியும் சாத்தியக் கூறுகளைக் கொண்டுள்ளன. மேலும் பொயிட்ஸ் புரொஸ்ட் டிரகன் என்றழைக்கப்படும் ஓணான் இனம் முக்கியமாக அழியும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இந்த ஓணான் சூழலின் வெப்பத்திற்கேற்ப தன் உடல் வெப்பநிலையையும் மாற்றி அமைத்துக் கொள்வதன் காரணமாகத் தன் வளர்ச்சியின் போது அதிக இடையூறுகளைச் சந்திப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## பிரேசில்

இந்நாடு காலநிலையில் சிறு மாற்றங்களை எதிர் கொண்டாலும் பாரிய சேதங்களுக்கு முகம் கொடுக்கும் நாடாக உள்ளது. இந்நாட்டிலுள்ள அமேசன் காடுகளில் வாழும் உயிரினங்களும், தாவரங்களும் அதிகமான சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளன. உலகின் முதன்மையான சேற்று நிலப் பிரதேசத்தைக் கொண்டுள்ள செராடோ பிரதேசத்தில் உள்ள முக்கியமான 2000 வகையான தாவரங்கள் அழியும் நிலையில் உள்ளதாக நம்பப்படுகின்றது.

## ஐரோப்பா

ஐரோப்பாவிலுள்ள பறவையினங்களில் பல அழியும் நிலை தோன்றி யுள்ளது. இவற்றில் ஸ்பொட்லஸ் ஸ்டாலின்க், அகூர் விள்க், ரெட்கைட் போன்ற பறவைகள் அழிந்து வருவ தாக நம்பப்படுகின்றது.

ஸ்கொட்டிஸ் குரொஸ்பில் என்றழைக்கப்படும் ஸ்கொட்லாந்து நாட்டிற்குரிய பறவையினம் ஐஸ் லாந்தில் ஏற்பட்ட காலநிலை மாற் றங்களால் அழிந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்த உயிரினங்களின் அழிவின் காரணமாக புவியில் ஏற்படும் அசாதாரண நிலையால் மனிதன் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என இவ் விஞ்ஞானிகள் மேலும் எதிர்வு கூறியுள்ளனர்

## மெக்ஸிக்கோ

ஸ்மோகி பொகட் அணில்கள், அல்கோர்ன் பொகட் அணில்கள், ஜிகோ மான்கள், பிக்மி ஆந்தைகள் மற்றும் மெக்ஸிக்கோ வண்ணத்துப் பூச்சிகள் என்பவை அழிந்து விட்டதாகக் கூறப்படுகின்றது.

## தென் ஆபிரிக்கா

தென் ஆபிரிக்காவிலுள்ள புரொட்சியா பூத்தாவரத்தில் முக்கியமாக பொகோமயக் என்றழைக்கப்படும் இனம் 30 வீதத்திலிருந்து 40 வீதம் வரை அழிந்து விட்டது. கூகர் தேசிய வனத்தில் 60 வீதம் அழியும் தறுவாயில் உள்ளன.

## கொஸ்டாரிக்கா

கொஸ்டாரிக்கா நாட்டிற்குரிய பொன் நிறமான தவளை இனம் அழியும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது. இந் நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக இன்று வரை அதிகமான தாவரங்களும், உயிரினங்களும் அழிந்து விட்டன.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நட்பு



நான் என்பது நட்பல்ல
நாங்கள் என்பதே நட்பு!
உபத்திரவம் செய்வது நட்பல்ல
உதவி செய்வதே நட்பு!
நண்பர்களின் உயிரை எடுப்பது
நட்பல்ல
நண்பர்களுக்கு உயிரைக்
கொடுப்பதே நட்பு!
ஆபத்தில் விலகி நிற்பது நட்பல்ல
ஆபத்தில் கைகொடுப்பதே நட்பு!
இன்பத்தில் மட்டும் பங்கு
கொள்வதல்ல நட்பு
துன்பத்திலும் பங்கு கொள்வதே
நட்பு!

சே.தியாகரன் - தரம் 9A,
பூந்தோட்டம், வவுனியா.

# நான் கண்ட சூரியோதயம்



இருளை விலக்கி உலகிற்கு ஒளிகொடுக்க ஆசை கொண்டு, ஆதவன் மலையிடுக்கு வழியே தன் பொற்கதிர்களைப் பரப்ப முனைந்தான்.

கிழக்கில் செவ்வானம் வர்ண ஜாலம் காட்டியது. குங்குமமும், சந்தனமும் சேர்த்துக் குழைத்துத் தெளித்து விட்டது போல் வானம் முழுவதும் ஒரே வர்ண ஜாலம். இதுவரை இரவிரவாய்க் கண்சிமிட்டியதால் களைப படைந்த விண்மீன்கள் ஓய்வெடுபதற்காக ஓடி ஒளிந்து கொண்டன. இதனாலே நிலவும் ஓடிப்போய் மேற்திசைவானில் நீந்தத் தொடங்கியது. கீழ்வானைக் கிழித்துக் கொண்டு பகலவன் புறப்படுவதை அறிந்து கொண்ட குயில்களும், சேவல்களும், குருவிகளும், புள்ளினங்களும் தத்தம் மொழியில் இசை பாடின. புள்ளினங்களின் பாடல் கேட்டு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த தாமரை மொட்டுக்கள், ஆதவன் வரவறிந்து சத்தமின்றிக் கண்விழித்தன.

ஆயிரம் கோடி மின்னல்கள் ஒன்று சேர்ந்து திரண்டு மின்னுவது போல் ஒளிவீசிய ஆதவன் மெல்ல மெல்ல மேலெழுந்தான். வான்மகளின் நீலநிற வதனம் நாணத்தால் சிவந்து செந்நிறமானது. அதை உணர்ந்து கண்விழித்தெழுந்த மக்களது நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. உலகம் உற்சாகம் பெற்றுக்கொண்டு தொழிற்படத் தொடங்கியது.

எம்.ஏ.எ.ஃப். அஸீதா
ஆண்டு - 08
நணகல்ல ம.ம.வித்தியாலயம்
துல்ஹிரிய

# என்னைப் பற்றி :

எனது பெயர் எம்.எம்.மொஹமட் மில்ஹான். நான் கொழும்பு,இசிபத்தன கல்லூரியில் கல்வி கற்கிறேன். நான் தரம் 5இல் கல்வி கற்கிறேன். எனது தந்தையின் பெயர் மவாஹிம். எனது தாயின் பெயர் கதீஜா. எனது பாடசாலை அதிபரின் பெயர் புன்னியதாச. வகுப்பாசிரியரின் பெயர் ஃபுஹாதா. எனக்குப் பிடித்த பாடம் கணிதம், தமிழ் ஆகியவையாகும். பிடித்தமான விளையாட்டுக் கிரிக்கெட். எனது பாடசாலையில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

எம்.மொஹமட் மில்ஹான்
ஆண்டு 6T
இசிபத்தான கல்லூரி
கொழும்பு - 5




# நாடுகளின் புனைப்பெயர்கள்

| | | |
|---|---|---|
| கங்காரு நாடு | - | அவுஸ்திரேலியா |
| ஐரோப்பாவின் போர்க்களம் | - | பெல்ஜியம் |
| ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு | - | பின்லாந்து |
| சூரிய உதய நாடு | - | ஜப்பான் |
| இருண்ட கண்டம் | - | ஆபிரிக்கா |
| தீவுக்கண்டம் | - | அவுஸ்திரேலியா |
| முடிவில்லா நகரம் | - | ரோமாபுரி |
| சர்க்கரைக் கிண்ணம் | - | கியூபா |
| மரகதத்தீவு | - | அயர்லாந்து |
| ஐரோப்பாவின் விளையாட்டரங்கம் | - | சுவிட்சர்லாந்து |

வ.கோ.கார்த்திகா தரம், 10A
யா-வட இந்து மகளிர் கல்லூரி

# வளமா இல்லை!

பிறந்த மண்ணை இழந்து
பெற்ற தாயைப் பிரிந்து
வளர்த்த தந்தையை மறந்து
பகை ஒழிக்கும் நட்பைத் துறந்து
வேறு தேசம் சென்று
வேர் அற்ற மரமாய் வாழ்ந்திட
என்ன வளம் இல்லை எம்நாட்டில்
வேறு என்ன வளம் வேண்டும்
இந்தத் திருநாட்டில்!

சலனம் செய்யும் அலைகள் உண்டு
என் மனதைப் போன்ற மலைகளும் உண்டு
குழல் போன்ற நீள் நதிகளரையும் உண்டு
கருத்துக்கள் பிறப்பிக்கும் நற்களங்களும் உண்டு
வேறு
என்ன வளமில்லை எம் நாட்டில்
வேறு என்ன வளம் வேண்டும்.
இந்தத் திருநாட்டில்!



மண் வளம் உண்டு
மணம் வீசும் மலர் வளமும் உண்டு
கடல் வளம் உண்டு
கனிதரும் சோலை வளமும் உண்டு
மலை வளம் உண்டு - நல்ல
மாண்பினர் கூறும் தமிழ் வளம் உண்டு
வேறு என்ன வளம் வேண்டும்
இந்தத் திருநாட்டில்!

சுபாஷினி - தரம் 11B
அ-முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை
வெலிப்பன்னை.

# ஹைக்கூ கவிதை



மின்சாரம்
இல்லாமல்
என்றென்றும்
சுடர் விடும்
மின்குமிழ்

- ஆசிரியர்கள்!



ஏழையோ
பணக்காரனோ
முயற்சியால்
சமனாகப் பெறும்
அற்புதச் செல்வம்

- கல்வி!

உயிர்களின் இயலாமையின்
இறுதிவெளிப்பாடு

- கண்ணீர்!

ஏழையின் எண்ணங்களின்
இறுதிவெளிப்பாடு

- பெருமூச்சு!

எம்.ஐ.எப்.முப்லிஹா, தரம் 9D,
அல்ஹிலால் மத்திய கல்லூரி,
நீர்கொழும்பு.

## நீங்களும் எழுதலாம்

'விஜய்'யின் மாணவர் ஆக்கப்பகுதிக்கு நீங்கள் உங்கள் ஆக்கங்களை எழுதி அனுப்பலாம். கவிதை, கட்டுரை, சிறுகதை மற்றும் அறிவு சார்ந்த விடயங்களை எழுதி அனுப்புபவர்கள், உங்கள் ஆக்கங்களை நேர்த்தியாகவும், அழகாகவும், ஒழுங்காகவும் எழுதி அவற்றைப் பாடசாலை அதிபரிடமோ அல்லது வகுப்பாசிரியரிடமோ கொடுத்து உறுதிப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள். தரமான ஆக்கங்களுக்கு "விஜய்"யில் என்றும் களம் உண்டு. ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி :

மாணவர் ஆக்கங்கள்
'விஜய்' த.பெ.எண். 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளின் நண்பன் சார்ள்ஸ் டிக்கன்ஸ்



சார்ள்ஸ் டிக்கன்ஸ்

உலகப் புகழ்பெற்ற ஆங்கில எழுத்தாளர் சார்ள்ஸ் டிக்கன்ஸ் மிகுந்த மனித நேயம் மிக்கவராக இருந்தார். அவரது கதைகளில் எப்போதும் துன்பத்தின் வடுக்களும், ஏழைகளின் துயரமும் நிறைந்திருக்கும். இவர், தானே அத்தகைய கொடுமையான வாழ்வை அனுபவித்தவராக இருந்ததால் தனது நிஜவாழ்வில் ஏழைகளுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்யத் தவறியதில்லை. இவரது முழுவாழ்வுமே துன்பதுயரங்கள் நிறைந்த ஒரு சோக காவியமாகவே இருந்தது.

17ம் நூற்றாண்டில் லண்டனில் வாழ்ந்த மக்களில் பலரும் மிகவும் ஏழ்மையில் இருந்தனர். அவர்களுக்கு உணவு கிடைப்பது சிரமமாக இருந்தபடியால் பல சிறுவர்கள் கள்வர்களாக மாறினர். இவர்கள் மத்தியில், பல கஷ்டங்களை அனுபவித்த ஒரு சிறுவன் தான், பின்னர் எல்லோராலும் விரும்பப்பட்ட, புகழ்பெற்ற எழுத்தாளர் சார்ள்ஸ் டிக்கன்ஸ் என்பவர்.

சார்ள்ஸ் ஜோன் ஹவம் டிக்கன்ஸ் பெப்ரவரி 7,1812ல் போர்ட்ஸ் மவுத் என்ற சிறு நகரில் பிறந்தார். இவரது தந்தை பெயர் ஜோன் டிக்கன்ஸ். அவர் இங்கிலாந்துக் கடற்படையில் எழுதுவினைஞராக வேலை செய்தார். சார்ள்ஸ் குடும்பத்தில் இரண்டாவது பிள்ளை டிக்கன்ஸ். இவருக்கு 8 சகோத[illegible]ள் இருந்தனர். இவர்களது குடும்பம் அவ்வளவு தனவந்தக் குடும்பம் அல்ல. சில காலம் சென்ற பின் சார்ள்ஸ்சின் தந்தையின் வேலை காரணமாக டிக்கன்ஸ் குடும்பம் வட கென்ட் மாநிலத்தில் உள்ள சத்தாம் நகரத்தில் குடியேறியது.

அங்கு சில காலம் வாழ்ந்த அவர்களது குடும்பம் வறுமையினால் பீடிக்கப்பட்டது. சிறுவன் டிக்கன்ஸ் அதிர்ஷ்டவசமாக வேல்ஸ் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தான். குடும்பத்தின் வறுமை காரணமாக டிக்கன்ஸ் பாடசாலையை விட்டு விலக நேரிட்டது. அவருக்கு அப்போது வயது 15. சார்ள்ஸுக்கு அவரது அம்மா புத்தகங்களை வாசிக்கவும் அதனைப் பற்றிய அறிவைப் பெறவும் உதவினார். அவனுக்கு 16 வயது இருக்கும் போது ஒரு சப்பாத்துப் பூச்சுத் தயாரிக்கும் தொழிற்சாலையில் வேலை கிடைத்தது. இக்காலப்பகுதியில் அவரது தந்தை பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்[illegible]தால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்.

வருடங்கள், நாட்கள் போல் கடந்தன. சார்ள்ஸ் டிக்கன்ஸ் தனது அறிவை மேம்படுத்த வாரப் பத்திரிகைகளுக்குச் சிறுகதைகள், கதைகள், நாடகப் பிரதிகளை அனுப்பினார். இது அவருக்கு வெற்றியாக அமைந்து, அவருக்கு ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தது. அவர் ஒரு பத்திரிகை நிருபராக வர வாய்ப்பு கிட்டியது. 1836ம் வருடத்தில் சார்ள்ஸுக்கு 24 வயது இருக்கும் போது, கெதரீன் ஹொகர் என்பவளை மணமுடித்தார். சார்ள்ஸ்சின் திருமணவாழ்க்கை அவருக்குச் சந்தோஷத்தைத் தரவில்லை. அவர்கள் இருவருக்கும் 10 குழந்தைகள் பிறந்தனர். காலம் செல்லச் செல்ல 1858ல் இவர்கள் இருவரும் பிரிந்தனர். சார்ள்ஸ் மிகவும் வறுமையில் இருந்தாலும், பல ஏழை மக்களுக்கு உதவி செய்தார். இவ்வாறே அவர் சிறுகதைகள், நாவல்கள், தொடர் கதைகள், கட்டுரைகளை எழுதினார். இவர் எழுதிய ஓல் த இயர் அரவுண்ட் (All the year around-1859-88) புத்தகம் 300,000 பிரதிகளுக்கு மேலாக விற்பனை ஆகியது, நல்ல வருமானத்தையும் பெற்றுக் கொடுத்தது.

இவர் இதேபோல் மேலும் பல புத்தகங்களை எழுதினார். அவரது கடைசிக் காலத்தில் Edwin Drood என்ற புத்தகத்தை எழுதினார்.

சார்ள்ஸ் டிக்கன்ஸ் தனது கிராம வீட்டில் சென்று தங்கினார். அவரது பிள்ளைகளால் அவருக்குத் துக்கம் மட்டுமே சேர்ந்தது. சார்ள்ஸ் தனது கிராம வீட்டில் தங்கி 3 மாதங்களுக்குப் பிறகு யூன் 9ம் திகதி 1870ல் இறந்தார். அவர் வெஸ்மினிஸ்ரர் அபேயி (Westminster Abbey) ல் அடக்கம் பண்ணப்பட்டார்.

எஸ். ஷர்மினி

## அவர் எழுதிய ஏனைய நூல்கள்

| | |
|---|---|
| Great Expectations (1860- 61) | கிரேட் எக்ஸ் பெக்டேசன்ஸ் |
| Bleak House (1852- 53) | பிளீக் ஹவுஸ் |
| Little Dorrit (1855- 57) | லிட்டில் டொரிட் |
| Tale of Two Cities (1859) | ரேல் ஒப் ரு சிட்ரீஸ் |
| Hard Times (1854) | ஹார்ட் டைம்ஸ் |
| History of England (1851- 53) | ஹிஸ்டரி ஒப் இங்லண்ட் |
| Dombey and Son (1846- 48) | டொம்பே அன் சன் |
| David Copperfield (1849- 50) | டேவிட் கொப்பர்பீல்ட் |

## இவரது பல நத்தார் கதைகளும் பிரசித்தி பெற்றவை அவையாவன

| | |
|---|---|
| Christmas Carols (1843) | கிறிஸ்மஸ் கரோல்ஸ் |
| The Chimes (1845 for 1844) | த சைம்ஸ் |
| The Battle of Life (1846) | பெட்ல் ஒப் லைப் |
| The Hundred man (1848) | த ஹன்ரட் மேன் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடித் தாத்தா

கண்ணாடித் தாத்தா என்பவர் ஊரில் பேர்போன ஒரு மந்திரவாதி. வருடத்தின் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களும் இவர் கண்ணாடியை அணிந்துகொண்டே இருப்பதால் ஊரார் மட்டுமன்றி அவரது பேரன், பேர்த்திகளும் அவரைக் கண்ணாடித் தாத்தா என்றே அழைத்து வந்தனர்.



மந்திரம் செய்வதில் ஊரில் இவர் பேர் போனவர் என்றபடியால், மந்திர வேலைகளைச் செய்வதற்காக இவரது வீட்டுவாசலில் ஏராளமானோர் தினமும் காத்து நிற்பதுண்டு. இப்படி இருக்கையில் இம்முறை பாடசாலை விடுமுறைக்காகக் கண்ணாடித் தாத்தாவின் பேரன், பேர்த்திகள் நான்கைந்து பேர் கொழும்பிலிருந்து தமது பட்டனாரான கண்ணாடித் தாத்தாவின் ஊருக்கு வந்திருந்தனர்.

இவர்கள் வந்த முதல் நாளே தமது சுட்டித்தனத்தை ஆரம்பித்துவிட்டனர். ஆனாலும் கண்ணாடித் தாத்தா இதனைப் பொறுத்துக் கொண்டே இருந்தார்.

ஒருநாள் அதிகாலை நேரம் கண்ணாடித் தாத்தா நித்திரையிலிருந்து எழுந்த கையோடு, முகம் கழுவச் செல்லத் தயாரானார். கண்ணாடியை அணியாமல் எதையுமே செய்யமுடியாத அவர் தனது கண்ணாடியைப் படுக்கையில் தடவித் தடவி தேடினார். கண்ணாடித் தாத்தா அதிர்ந்துபோனார். அவரது கண்ணாடியை அங்கு காணவில்லை. கண்ணாடி இல்லாமல் அவரால் ஓர் அடியைக் கூட எடுத்து வைக்க முடியாது. இதனால் அவர் பெரிதும் கலங்கிப் போனார்.

அப்போது அவருக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றியது. நேற்றிரவு மந்திரம் செய்து விரட்டிய பேய்தான் இந்தக் காரியத்தைச் செய்ததோ? என அவர் சந்தேகம் கொண்டார். "இரு உனக்கு நல்ல பாடம் புகட்டுகிறேன்" என்று கூறியவாறு, மீண்டும் மந்திரம் சொல்லத் தொடங்கினார்.

"ஓம் ப்ரீங்... ஓம் ப்ரீங்... ஓம் ப்ரீங்..., எனது கண்ணாடியை எடுத்த பிசாசே வா வா..." என மந்திரித்தார்.

மந்திரிக்கும் சத்தத்தைக் கேட்ட கண்ணாடித் தாத்தாவின் பேரப் பிள்ளைகள் பயத்தில் நடுங்கிப் போனார்கள். ஏனென்றால் தாத்தாவின் கண்ணாடியை அவருக்குத் தெரியாமல் எடுத்தவர்களே அவர்கள்தான்! விளையாட்டுக்காகக் கண்ணாடியை எடுத்து விளையாடியவர்கள் இப்போது மாட்டிக் கொண்டு தடுமாறினார்கள். "கண்ணாடியை தாத்தாவுக்கு சொல்லாமல் கொள்ளாமல் எடுத்துவிட்டோமே... இப்போது அவர் மந்திரிப்பதால் ஏதாவது நடந்துவிடுமோ" என அவர்கள் பயந்தனர். எந்தவொரு பொருளை எடுத்தாலும் அதனை மீண்டும் அதே இடத்தில் வைக்க வேண்டும் என்பது அவர்களுக்கு ஞாபகத்தில் வரவில்லை. உடனே அந்தக் கண்ணாடியை தாத்தாவிடம் கொடுத்தனர்.

"இப்படியான ஞாபகமறதியினால் நாம் வீணாகப் பிரச்சினைகளில் சிக்கிக் கொள்ள வேண்டியேற்படும். வயதில் மூத்தோரின் பொருட்களை எடுக்கும்போது அவர்களின் அனுமதியோடு அவற்றை எடுக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும்" எனத் தாத்தா கூறியதோடு அவர்களுக்குத் தலையில் ஒரு குட்டும் வைத்தார்.

## படிப்பினைக் கதை

ஆனாலும் சிறிது நேரத்தின் பின்னர், கண்ணாடித் தாத்தாவிற்குக் கவலை ஏற்பட்டது "பிள்ளைகளுக்கு தலையில் குட்டிவிட்டேனே" என அவர் கவலைப்பட்டார். உடனே மறுநாள் காலை சந்தைக்குப் போன அவர் சிறுபிள்ளைகளுக்கான விளையாட்டுக் கண்ணாடியொன்றை வாங்கிக்கொண்டு வந்து, தனது பேரன், பேர்த்திகளிடம் கொடுத்தார். அவர்கள் அதனை வைத்துக் கொண்டு விளையாடத் தொடங்கினர்.

# புதிர்க் கவிதைகள்

- இரா. சடகோபன்-

சிங்கள மூலம்:
திலக்க நவரத்ன

(01) மண்ணின்றி வளர்வாய் நீ
மட மங்கைக்கழகு நீ
வெட்ட வெட்ட தளிர்ப்பாய் நீ
வெழுத்தால் மட்டும் வேண்டாம் நீ

- யார் நீ? -

(02) காய் கனிகள் இல்லா மரம்
இலையும் கிளையும் வளராமரம்
மரணம் வந்து சேரும் மரம்
நீதி வழங்கி நிமிர்ந்த மரம்

- என்ன மரம்? -

(03) நெல்லுக் குத்தும் நெடிதொருவன்
நிமிர்ந்து குனிய நிலம் நடுங்கும்
அரிசியைப் பொடித்து மாவாக்கும்
அரிவையர் இடையை நோகடிக்கும்

- அது என்ன? -

(04) ஆகாய கங்கையில் மீன் என்பர்
ஆயிரங்கோடி உண்டென்பர்
இரவுக்கு நண்பன் இவன் என்பர்
இருண்ட வானில் ஒளி என்பர்

- யார் இவன்?

(05) ஆற்றைக் கடக்க கை கொடுப்பான்
நித்தமும் நீரில் தத்தளிப்பான்
நீரைக் கிழித்து நீந்திடுவான்
நினைத்தால் கரையில் நின்றிடுவான்

-அவன் யார்? -

(06) உண்மையைக் கொன்று
புதைத்து விடும்
உயிரையும் கூட குடித்து விடும்
உலகுக்கு தீமை சேர்த்து விடும்
ஊரையும் இரண்டாய் ஆக்கி விடும்

-அது என்ன? -

(07) மணமகன் மணமகள் இணை...
மனங்கவர் வர்ணங்கள் கொண்...
திருமணப் பந்தத்தில் பிணைப்பது
திருவென இருவரும் அமர்வது

-அது என்ன? -

(08) மணம், நிறம், சுவை
உனக்கு இல்லை
மலைமுகட்டில் உருவான பிள்ளை
நீயின்றி உயிர்வாழ்க்கை இல்லை
நீதானே இவ்வுலகின் எல்லை

- நீ யார்? -

(09) திருகித் திறக்க நீ வேண்டும்
திருடன் கூட வைத்திருப்பான்
கோட்டை கொத்தளம் என்றாலும்
கொத்துக் கொத்தாய் நீயிருப்பாய்

- நீ யார்? -

(10) வெட்டொன்று துண்டிரண்டு என்பாய்
வெட்டுவதைத் தொழிலாகக்
கொண்டாய்
இரு தலைகள் இரு கால்கள்
உற்றாய்
இரு விரலால்
இயக்கங்கள் பெற்றாய்

- யார் நீ ? -

விடைகள் 08ஆம் பக்கத்தில்

படத்தை
இங்கே
ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்
விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர் :......................................
முகவரி : ......................................
......................................
பாடசாலை : ......................................
வகுப்பு : ......................................
பாடசாலை அதிபரின் கையொப்பம் : ....................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம்


நிறைவேற்று அதிகாரி திருமதி பெலலம்


உலகம் பூராவிலுமுள்ள உதவி தேவைப்படும் சிறுவர்களின், நீண்டகால சமூக அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் இணைத் தாபனமாக யுனிசெப் நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

## வரலாறு

1946ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத் தொடரின் போதே இந்நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது.



unicef



ஆரம்பத்தில் இந்நிறுவனமானது ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் இடர் நிதியம் என்ற பெயரிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

1946ம் ஆண்டு தொடக்கம் 1953ம் ஆண்டு வரை இப்பெயரிலேயே இது அழைக்கப்பட்டது. 1946ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இவ்வமைப்பானது இரண்டாம் உலகப் போரில் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவையை நிறைவு செய்வதற்காகவே அமைக்கப்பட்டது. 1950ம் ஆண்டின் பின்னர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் திடீரென ஏற்பட்ட இடர்களின் போது சிறுவர்களின் சமூக நலனை விருத்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டது. ஆரம்பத்தில் நிறுவப்பட்ட நிறுவனத்தின் பெயரிலுள்ள முதல் எழுத்துக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாமல் தற்போது இந்நிறுவனம் "ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் நிதியம்" என்ற பெயரில் 'யுனிசெப்' என்ற பெயரைப் பெறுகின்றது.

## தலைமையகம்

இந்நிறுவனத்தின் தலைமையகம் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரில் அமைந்துள்ளது. இந்நிதியத்தில் இன்று 158 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன. 126 நாடுகளில் இதன் கிளை நிறுவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## நோக்கம்

1946ம் ஆண்டு தொடக்கம் 1953ம் ஆண்டு வரை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச சிறுவர் இடர் நிதியம் என்றழைக்கப்பட்ட இந்நிறுவனம் இரண்டாம் உலக மகாயுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவைகளை நிறைவு செய்தலைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

இன்று உலகம் பூராவிலுமுள்ள சிறுவர்களின் சமூக நலனை விருத்தி செய்தலை இது நோக்காகக் கொண்டு செயற்படுகின்றது.

## கடமைகளும் செயற்பாடுகளும்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள சிறுவர்களின் மற்றும் இளைஞர், யுவதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்நாடுகளுக்கு உதவிகளை வழங்கலோடு சுகாதாரம், போசனை, சமூக நலன், கல்வி, தொழிற் பயிற்சி என்பவற்றிற்கு இந்நிறுவனம் உதவி வழங்குகின்றது. சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலுக்கும் உதவி வழங்குகின்றது.

தொற்று நோய்களைத் தடைசெய்தல் மற்றும் தொற்று நோய்களுக்குப் பரிகாரம் வழங்குதல், சுகாதார சேவையை விருத்தி செய்தல், தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித் திட்டம், தாய்ப்பால் கொடுத்தலை ஊக்குவித்தல், சிறுவர் போஷனை சம்பந்தமாக இணைப்புத் திட்டங்களை ஊக்குவித்தல் என்பனவும் இதன் செயற்பாடுகளாக உள்ளன.

**உலகம் பூராவிலுமுள்ள சிறுவர்களின் சமூக நலனை நோக்காகக் கொண்டு செயற்படும் நிறுவனமே யுனிசெப் நிறுவனமாகும். இது ஐக்கிய நாடுகள் சபையின் இணைத் தாபனமாகச் செயற்படுகின்றது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் உதவியுடன் இந்நிறுவனம், வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது**




சுகாதார சேவையில் ஈடுபடும் தனிப்பட்டவர்களுக்குப் போதிய பயிற்சியை வழங்கல் என்பவற்றை யுனிசெப் நிறுவனம் செய்து வருகின்றது.

தேவையான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை ஏற்படுத்திக் கொடுத்தலையும் இந்நிறுவனம் செய்து வருகின்றது.

## நிர்வாகமுறை

உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் யுனிசெப் நிறுவனத்தின் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இங்குள்ள நிர்வாக சபை மற்றும் அங்கத்தவர்களின் மொத்தத் தொகை 36ஆக உள்ளது. பல நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் அங்கத்தவர்களாக உள்ளனர்.



## நிதி பெறப்படும் வழிகள்

ஒவ்வொரு நாடுகளிலுள்ள அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் தனிப்பட்டவர்களின் நிதி உதவிகளாலும் யுனிசெப் நிறுவனத்தின் நிதி கட்டியெழுப்பப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளராகத் திருமதி கேரோல் பெலம் என்பவர் 1995ம் ஆண்டு முதல் கடமையாற்றி வருகின்றார்.

1965ம் ஆண்டு இந்நிறுவனத்திற்கு நோபல் சமாதானப் பரிசு கிடைக்கப் பெற்றது. சிறுவர் உலகிற்கு மட்டுமன்றி முழு மனிதகுலத்திற்கும் உலகளாவிய ரீதியில் இந்நிதியத்தினால் வழங்கப்படும் சேவை மதிப்பிற்குரிய ஒன்றாகவே அமைந்துவருகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேய்களுக்கு இசைவிருந்தளித்த பார்வையற்ற இசைஞன்


ஈழப் பெருஞ்சித்தன்

மண்டபத்தில் கூடியிருந்தோர்கூறிய வார்த்தைகள் தேவராயனை மேலும் பரவச மூட்டின. அவன் உடம்பில் புது இரத்தம் பாய்ந்தது போலிருந்தது. அவன் முன்னையதிலும் மிக ஆழ மான மெய்மறந்த நிலைக்குச் சென் றான். அவன் கதையின் இறுதிக் கட்டத்துக்கு வந்தான். நீதியை, அநீதி வென்றதை மிக்க உணர்ச்சியுடன் பாடி னான். நீதி அநாதரவாக விடப்பட்டு மாண்டதை உருக்கமாகக் கூறினான். யுத்த முனையில் எவ்வாறு உருத்தர பூதன் அநாதரவாகச் சிக்கிக் கொண் டார் என்பதைப் பாடினான். அவன் மனைவி, மக்கள் எவ்வாறு வெட்டிச் சாய்க்கப்பட்டனர் என்று பாடினான். பூத னின் சிறுவயதுப் பாலகன் விஜய பூதன் வாளேந்திப் போராடி கொடூர மாகக் கொல்லப்பட்டதைப் பாடினான். பார்த்தி ருந்தவர்கள் சோக உணர்வின் மிக உச்ச நிலைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர். தேவராயனின் அற் புத இசையால் அனைவரும் சோக மேலீட்டால் அலறித் துடிக்க ஆரம் பித்தனர்.

"ஐயகோ.... ஐயகோ" என்று அழுது புலம்பிக் குழறினர். மார்பில் அடித்துக் கொண்டு வீழ்ந்து புரண்டனர். அங்கு எழுந்த அல்லோல கல்லோல நிலைமையால் தேவராயன் கலவரப் பட்டான். அவன் இசையை நிறுத்திய பின்பும் நீண்ட நேரத்துக்கு அழுது புலம்புவது, விசும்புவது கேட்டுக் கொண்டேயிருந்தது. பின்னர் சிறுதி சிறிதாக அமைதி மீளத் தொடங் கியது. நன்றாக நிசப்தம் ஏற்பட்ட பின்னர் அவனை முன்பு கரம்பிடித்து அழைத்துவந்த பெண்மணியின் குரல் ஒலித்தது.

"இசைஞனே உன்னைப் போன்ற ஒரு அற்புதக் கலைஞனை நாம் இதுவரை கண்டதில்லை. இன்றி ரவு நாம் பெற்ற ஒப்பற்ற இந்த அனுப வத்தை எமக்குத் தந்ததற்கு நன்றி. எமது ஆண்டகை உனது இசை வல்ல மையை ஆசைப்படுகிறார். ஆனால் நீ ஒரு நிபந்தனையை நிறைவேற்ற வேண் டும். நீ இன்றிலிருந்த ஆறு இரவுக ளுக்கு இவ்விதம் இங்கு வந்து எமது ஆண்டகையைப் பாடிப் பரவசப்படுத்த வேண்டும். இந்த ஆறு இரவுகளின் பின் னரே உனக்கு உறுதியளிக்கப்பட்ட படி வெகுமதிகள் கிடைக்கும். அதன்பின் எம் ஆண்டகை இந்தப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு திரும்ப இருக்கி றார். ஆதலால், நீ ஒவ்வொரு நாள் இரவும் குறித்த நேரத்தில் இங்கு வந்து சேர வேண்டும். உன்னை அழைத்துவர, இன்று உன்னை இங்கு அழைத்து வந்த அதே ஆள் வருவான். அவனுடன் நீ தவறாமல் வந்து விடவேண்டும். மற் றது, இன்னொரு விடயம் தொடர்பிலும் உனக்கு அறிவுறுத்துமாறு ஆண்டகை கட்டளையிட்டுள்ளார். ஆண்டகை இந்த விஜயத்தை மாறுவேடமிட்டு இரகசிய மாக மேற்கொண்டிருப்பதால் நீ இங்கு வந்து போகின்றமை தொடர்பில் யாரிட மும் அவர் திரும்பிப் போகும்வரை பேசக்கூடாது. இது ஆண்டகையின் கட்டளை....நீ இப்போது உன் இருப்பி டத்துக்குப் போகலாம்". என்றது குரல்.

அதன்பின் தேவராயன் அங்கி ருந்தோர் அனைவருக்கும் வணக்கம் கூறி, நன்றி தெரிவித்து விடை பெற்றுக் கொண்டான். அந்தப் பெண்மணி அவ னை மீண்டும் அழைத்துச் சென்று வாயிலில் விட்டாள். அங்கே முன்னர் அவனை அழைத்து வந்த மன்னரின் மெய்ப்பாதுகாவலன் இருந்தான். அவனுடன் கோயிலைச் சென்றடைந்தான் தேவராயன்.



குறுங்கதை
அத்தியாயம் : 3

அவன் வந்து சேர்ந்த நேரம் விடியும் தறுவாயாக இருந் தது. எனினும் அவன் அன்றிரவு வெளியே போய் வந்தமை தொடர் பில் யாரும் அறிந்திருக்கவில்லை. நள்ளிரவுக்குபின் நீண்ட நேரம் கழித்தே கோயில் திரும்பிய பூசக ரும் அவரின் உதவியாளனும் அவன் நித்திரையில் இருப்பதாக எண்ணித் தத்தமது அறைகளுக் குச் சென்றுவிட்டனர். அடுத்த நாள் நேரஞ் சென்றே எழுந்திருந்த தேவராயன் போதுமான அளவு ஓய்வெடுத்துக் கொண்டான். முதல் நாள் இரவு இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் அவன் யாரிடமும் பேச வில்லை.

அடுத்த நாள் இரவு சொல்லியிருந்த படி தேவராயனை அழைத்துச் செல்ல அரசனின் மெய்பாதுகாவலன் குறித்த நேரத் துக்கு வந்திருந்தான். அவனை முன்னர் போலவே அழைத்துச் சென்றான். எல்லாமே முன்னர் ஏற்பாடு செய்தபடியே நடந்தேறின. முதல் நாளைப் போலவே அவன் இசை நிகழ்ச்சி மிக வெற்றிகரமாக நிகழ்ந்தேறியது. எனினும் இம்முறை அவன் யாரிடமும் சொல்லாமல் கோ யில் மடத்தில் இருந்து இரவில் வெளியேறிச் சென்றமையையும், அவன் நீண்டநேரம் வரவில்லை என்பதையும் கோயில் குருக்கள் தற்செயலாக அறிய நேரிட்டிருந்தது. அவன் அதிகாலை கோயில் மடத் தில் நுளைந்த கையுடனேயே அவ னைப் பிரதம குருக்கள் வரச்சொன் னதாகச் செய்தி வந்தது.

அவன் உடனேயே பிரதம குருக்களைச் சந்திக்கச் சென்றான். பிரதம குருக்கள் அவனை மிக அனுதாபத்துடன் பார்த்தார். "தேவரா யா, இருட்டில் நடுநிசி வேளையில் கண் தெரியாத ஒருவன் தனியாக வெளியே செல்வது மிக ஆபத்தான தாகும். ஏன் எங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் அவ்விதம் செய்தாய்? என்னிடம் கேட்டிருந்தால் நான் வேலைக்காரர் யாரையாவது ஏற்பாடு செய்து கொடுத்திருக்க மாட்டேனா? அப்படி நீ எங்கு தான் போனாய்?" குருக்கள் உண்மையான வாஞ்சையு டனேயே கேட்டார்.

தேவராயனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில் லை. உண்மையை மறைப்பதனைத் தவிர வேறு வழியில்லை. "மன்னிக்க வேண்டும் சுவாமி, எனக்குத் தவிர்க்க முடியாத பிரத்தியேக வேலை ஒன்று இருந்தது. அதனை வேறு நேரத்தில் செய்ய முடியவில்லை?" தேவராயன் தயங்கித்தயங்கிக் கூறினான்.

குருக்களுக்கு அவன் மீது சந்தேகம் வந்தது. அவர் வியப்பும் அனுதாபமும் கொண்டார். அவன் அந்த நேரத்தில் கண்தெரியாத நிலையில் வெளியே போனான் என் பது இயற்கைக்கு மாறாக இருந்தது. ஏதோ வேறு நடந்துள்ளது என்று கருதினார். அந்தக் கண்தெரியாத இசைஞனைக் கெட்ட ஆவிகள் ஏதும் பிடித்திருக்கலாம் என்று எண்ணின அவர் அவனிடம் வேறு கேள்விகள் எதனையும் கேட்கவில்லை. எனினும் கோயில் பணியாளர்களை அழைத்து அவனை இடைவிடாமல் அவதானிக் குமாறும், இரவில் யாருக்கும் தெரியா மல் வெளியில் போகமுயன்றால் அவனை பின்தொடருமாறும் பணித் தார்.

அன்றிரவும் குறித்த நேரத்தில் தேவ ராயன் மடத்தில் இருந்து வெளியே றிச் செல்வதனைப் பணியாளர்கள் அவதானித்தனர். அவர்கள் கைவிளக் குகளை ஏற்றிக் கொண்டு தேவராய னைப் பின் தொடரமுற்பட்டனர். எனி னும் அன்றைய இரவு மழையுடன் கூடியதாகவும், சந்திரனும் நட்சத்திரங் களும் அற்றதாக இருந்ததால் மிகக் கும்மிருட்டாக இருந்தது. பணியாளர் கள் தட்டுத்தடுமாறிப் பிரதான பாதை யை அடைவதற்கு முன்னரே தேவரா யன் இருளில் மாயமாய் மறைந்து போயிருந்தான். அந்த இருளில், அந்த மோசமான பாதையில் கண் தெரி யாத ஒருவன் அவ்வளவு வேகமாகசி சென்றிருக்க முடியுமா? என்று வியந்தனர் பணியாளர்கள்.

எனினும் பணியாளர்கள் பாதையில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை தே னர். தேவராயன் சென்றிருக்கக் கூடு என்று சந்தேகப்பட்டு, அவனுக்குப் பழக்கமான வீடுகளிலெல்லாம் சென்று அவன் அங்கு வந்தானா? என்று விசாரித்தனர். ஆனால் யாருமே அவனைப் பாரக்கவில்லை என்றே தெரிவித்தனர். அவர்கள் பல இடங் களிலும் தேடிப் பார்த்துவிட்டு வேறு மார்க்கமில்லாமல் கடற்கரை வழியூ டாக மடத்தை நோக்கித் திரும்பி வந்தனர். அவர்கள் உருத்திர பூதனுக்கும் அவன் குடும்பத்தினர் மற்றும் பரிவாரங்களுக்கும் அமைக் கப்பட்டிருந்த கல்லறைப் பூமியை அண்மித்த போது யாரோ தூரத்தில் புல்லாங்குழல் இசைக்கும் சத்தம் கேட்டது. அச்சமூட்டும் விதத்தில் கல்லறைகளில் தீச் சுவாலைகள் சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தனவே தவிர, மற்றப்படி பிரதேசமெங்கும் மரண அமைதி நிலவியது. அத்த கைய ஒரு சூழலில் கல்லறையில் இருந்து வந்த புல்லாங்குழலிசை நாராசமாகக் காதுகளைத் துளைத் தது.

**அப்புறம் என்ன நடந்தது? அடுத்த இதழில் இக்கதை முற்றுப்பெறும்**

## நட்சத்திர அறிமுகம்

அன்பு உள்ளங்களே, நீங்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் ஆடல், சங்கீதம், பாடல், நடனம், ஓவியம், எழுத்து, விளையாட்டு, கண்டுபிடிப்புக்கள், எனப் பலதரப்பட்ட இன்னோரன்ன விடயங்களில் சாதனை படைத்திருப்பீர்கள். உங்களின் மேற்படி சாதனைகளை 'விஜய்'யில் பிரசுரிப்பதற்கு நாம் விருப்பத்துடன் உள்ளோம். எனவே, உங்களது சாதனைகளுக்குச் சான்று பகரும் புகைப்படங்களையும், அவை குறித்த விபரங்களையும் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் (கட்டாயம்) அனுப்பி வைக்குமாறு கேட்டு கொள்கின்றோம்.

அனுப்பவேண்டிய முகவரி

"நட்சத்திர அறிமுகம்"
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முழு மானிட சமுதாயத்திற்கும் அருட்கொடையாக வந்த கருணை நபி

**இக்கட்டுரை 02.05.2004 ஆம் தினத்தன்று அதாவது ஹிஜ்ரி 1425 ரபியுள் அவ்வல் பிறை 12இல் நினைவு கூரப்பட்ட முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தையொட்டிப் பிரசுரமாகின்றது.**



முழு மானிட சமுதாயத்திற்கும் அருட்கொடையாக வந்தவரே - இஸ்லாத்தின் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள்.

அன்பு, கருணை, இரக்கம் போன்ற உயர்ப் பண்புகளின் மூலம் இவ்வுலகில் ஓர் உன்னத சமுதாயத்தையே உருவாக்கிக் காட்டிய பெருமை மாநபி (ஸல்) அவர்களையே சாரும்.

நபி (ஸல்) அவர்கள், ரபியுள் அவ்வல் பிறை பன்னிரண்டில் சவூதி அரேபியாவின் மக்கா நகரில் மிகவும் சிறந்த பாரம்பரியப் பெருமையுள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தார்கள். தாயாரின் வயிற்றில் இரு மாதச் சிசுவாக இருக்கும் போது, அவர்களின் தகப்பனார் அப்துல்லா மரணமானார். ஆறாம் வயதில் தாயார் ஆமினாவும் மரணமானார்கள். சிறு வயதிலே பெற்றோர்களின் ஆதரவை இழந்து நின்ற அநாதையான இறைதூதர் அவர்களை அவரது பாட்டனாரான அப்துல் முத்தலிப் பராமரித்து வந்தார்.


முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் சிறு பருவத்தில் மிகச் சுறுசுறுப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் சிந்தனைத் தெளிவுடன் வளர்ந்தார்கள். நபி (ஸல்) அவர்களின் அனைத்துச் செயற்பாடுகளினாலும் மக்கா வாசிகள் பெரிதும் கவரப்பட்டனர். இதனால்தான் தங்கள் விலைமதிப்புள்ள பொருட்களைக் கூட நபியவர்களிடம் பாதுகாப்பிற்காகக் கொடுத்து வைத்தார்கள். என்றும் உண்மையையே பேசியதாலும், நேர்மையாகவும், இறையச்சம் கொண்டவராகவும், இன்பதுன்பங்களின் போதும் வறுமையின் போதும் வாக்குறுதி மாறாமல் இருந்த அன்னாரின் நற்குணங்களினால் கவரப்பட்ட மக்கா வாசிகள், "அல் அமீன்" நம்பிக்கைக்குரியவரென்றும், "அஸ்ஸாதிக்" உண்மையானவர் என்னும் சிறப்புப் பெயர் கொண்டு அவரை அழைத்தனர்.

தனது வாலிபப் பருவத்தில் கூட நேர்மையாகவும் புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டார்கள் என்பதற்குப் புனித க.்.பதுல்லா பள்ளிவாசல் புனர்நிர்மாணப் பணிகளின் போது அவர் நடந்து கொண்ட விதம் நமக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். ஒரு முறை க.்.பதுல்லா புனர்நிர்மாணப் பணிகளின் போது ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்தோரும் க.்.பாவின் ஒவ்வொரு சுவர்களையும் புனர்நிர்மாணிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. அப்போது அங்கிருந்த "ஹஜருல் அஸ்வத்" கல்லை அதற்குரிய இடத்தில் எடுத்து வைப்பது யார்? என்று மக்கா வாசிகள் தர்க்கித்துக் கொண்டிருந்தனர். இறுதியில் மறுநாள் அதிகாலையில் யார் க.்.பதுல்லாவை வந்தடைகிறாரோ அவர்த் சொல்லும் தீர்ப்பே ஏற்றுக் கொள்ளப்படும் என முடிவு செய்யப்பட்டது. இதன்படி மறுநாள் அதிகாலையிலேயே க.்.பதுல்லாவை வந்தடைந்த நபியவர்கள், அங்கு கூடியிருந்த ஒவ்வொரு கோத்திரத் தலைவர்களையும் முன்னால் அழைத்து தன் துப்பட்டியைக் கீழே விரித்து அதன் மேல் ஹஜருல் அஸ்வத் கல்லை வைத்தார்கள். பின்பு அங்கு வந்த தலைவர்களுடன் ஒன்று சேர்ந்து அக்கல்லைத் தூக்கிச் சென்று உரிய இடத்தில் வைத்தார்கள். இதனால் அன்று மக்காவில் நிலவ இருந்த பெரியதொரு கலவரம் இடைநிறுத்தப்பட்டு சமாதானம் நிலைநிறுத்தப்பட்டது.

**மாநபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவங்களும் நடத்தைகளும் அவரது வாழ்க்கைமுறையும் நமக்குச் சிறந்த வழிகாட்டலாக அமைகின்றன**


இதிலிருந்து நாம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வீணாகத் தர்க்கிப்பதை விட்டுவிட்டு அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை முன் வைப்பதிலும் சமாதானத்தை நிலை நிறுத்துவதிலும் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

இது தவிர முஹம்மத் நபியவர்கள் அடிக்கடி ஹிரா மலைக் குகையில் தனித்திருந்து தியானத்தில் ஈடுபடுவது வழக்கம். இவ்வாறு இருக்கும் போது தான் தமது நாற்பதாவது வயதில் நபிப் பட்டம் வழங்கப்பட்டது. இதுவே அல்குர்ஆனின் ஆரம்ப நிலையும் கூட. அன்றிலிருந்து தொடர்ந்து 23 வருடங்களாகச் சிறிது சிறிதாக இறக்கப்பட்ட அல்குர்ஆன் போதனைகளை மக்களுக்கு எடுத்துக் கூறி முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி உலகில் இன்று 110 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பின் பற்றும் ஒரு சக்திமிகு மார்க்கமாக இஸ்லாத்தைக் கட்டியெழுப்ப வித்திட்டார்.



எனவே மாநபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் நடந்த ஒவ்வொரு சம்பவங்களும் நடத்தைகளும் அவரது வாழ்க்கை முறையும் நமக்குச் சிறந்த வழிகாட் டலாக அமைகின்றது. அத்தோடு சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் என்ற தார்மீகப் பண்புகள் மூலம் ஒரு தார்மீக சமுதாயத்தைக் கட்டியெழுப்பிய இறைதூதரது வாழ்விலும் செயலிலும் எமக்கு நிறைந்த படிப்பினைகள் உண்டு.

# உணவுக் கோபுரம் என்பதனால் விளக்கப்படுவதென்ன?




இலங்கையர்களான நமக்கு இயற்கை பலவிதமான உணவுகளைத் தந்திருக்கின்றது. பழங்கள், காய்கறிகள், தானியங்கள், விதைகள் என்பன எமது சுற்றுப்புறத்தில் ஏராளமாகக் கிடைக்கின்றன. இவை அனைத்தும் நாளாந்தம் நமக்குத் தேவையான சக்தியையும் ஊட்டச் சத்துக்களையும் தருகின்றன. எனவே ஆரோக்கியமான வாழ்க்கைக்குப் போதிய அளவிலான ஊட்டச் சத்துக்களை எப்படிப் பெறலாம் என்பதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

நமக்குத் தினமும் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் எவ்வளவு என்பதைச் சுகாதார நிபுணர்கள் கணித்து வைத்திருக்கின்றார்கள். இது உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எமது வழமையான உடற்செயற்பாடுகளைப் பராமரிப்பதற்குச் சராசரி 2000 கிலோமீற்றர் சக்தி தேவைப்படுகின்றது. இந்த அளவு சக்தியைப் பெறுவதற்கும், உடலுக்குரிய செயல்களைச் செயற்படுத்துவதற்கும் உடல் வளர்ச்சிக்கும், 300 கிராம் கார்போஹைட்ரேட், 65 கிராம் கொழுப்பு, 50 கிராம் புரதம், 25 கிராம் நார்ப்பொருள் என்பன தேவை என அமெரிக்காவின் உணவு அதிகாரசபை சிபாரிசு செய்துள்ளது. எனினும் எமது நாட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டின்படி, நாம் உட்கொள்ளும் உணவின் அளவு மிகக் குறைவு என்பன கண்டறியப்பட்டுள்ளது.

இதன்படி எமக்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் : கார்போஹைட்ரேட், புரதம், கொழுப்பு என்பனவாகும்.


இவை அடங்கியுள்ள உணவுவகைகளையும் நாம் உட்கொள்ள வேண்டிய அளவுகளையும் இங்குள்ள உணவுக் கோபுரம் விளக்



மேலேயுள்ள உணவுக் கோபுரத்தில் ஐந்து அடுக்குகள் உண்டு. ஒவ்வொரு அடுக்கிலும் வெவ்வேறு விதமான உணவுகள் உண்டு. ஆதலால் எமது உணவைச் சமன்படுத்துவதற்கு ஒவ்வொரு அடுக்கிலுமிருந்து உணவைத் தெரிவுசெய்ய வேண்டும். மேல் தட்டிலுள்ள உணவுகள் கொழுப்புச் சத்தைக் கூடுதலாகக் கொண்டவை. அடித் தட்டிலுள்ளவை கார்போஹைட்ரேட்டைக் கூடுதலாகக் கொண்டவை.

சாப்பாட்டளவு என்பது வளர்ந்த ஒருவர் அல்லது 4 வயதுக்கு மேற்பட்ட ஒரு பிள்ளை ஒரு நேரத்தில் சாப்பிடும் அளவாகும். நாளொன்றுக்கு உட்கொள்ள வேண்டிய ஒவ்வொரு வகை உணவினதும் சாப்பாட்டளவின் எண்ணிக்கை அட்டவணையில் காட்டப்படுகின்றது.

எனவே தினமும் நாம் உட்கொள்ளும் உணவு மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உணவு வகைகளையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அப்போதுதான் அது நிறையுணவாக அமையும். இதுவே உணவுக் கோபுரத்தின் ஊடாகவும் விளக்கப்படுகின்றது.



## ஒருவர் அன்றாடம் உட்கொள்ள வேண்டிய உணவு முறை

| | |
|---|---|
| | (1-2 சாப்பாட்டளவு) |
| கொழுப்பு (எண்ணெய்) சீனி, (சிறிய அளவில்) | காய்கறி, பழங்கள் (2-3 சாப்பாட்டளவு) |
| தானியம், மீன், இறைச்சி, முட்டை (1-2 சாப்பாட்டளவு) | அரிசி, கோதுமை, கிழங்கு, பாண், வேறு கோதுமை தயாரிப்புகள் (6-12 சாப்பாட்டளவு) |
| பால் உற்பத்திப் பொருட்கள் | (1 சாப்பாட்டளவு- ஏறக்குறைய 50கிராம்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிரிக்கெட் களத்தில் இளம் கரம்!

# சிம்பாப்வே அணியின் தலைவர் தயிபு

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் தலைவராக தயிபு என்ற 20 வயது இளைஞன் நியனம் பெற்றாலும் பெற்றார் - கிரிக்கெட் உலகின் பார்வை அவர்மீது சமகாலத்தில் குவியத் தொடங்கி விட்டது.

ஏற்கனவே சிம்பாப்வே அணியின் தலைவராக இருந்த ஹீத் ஸ்ட்ரீக் அணியிலிருந்து விலகியதை அடுத்து தயிபுவுக்கு அணியின் தலைமைப் பதவி வழங்கப்பட்டது.

சிம்பாப்வே நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர் ரொபர்ட் முகாபே. இவர் கறுப்பினத்தவர்களுக்குச் சார்பாக அந்நாட்டில் நிறவெறி ஆட்சி நடத்தி வருபவர். இவரது இந்த நிறவெறி ஆட்சிமுறையை எதிர்த்தே ஹீத் ஸ்ட்ரீக் அணியிலிருந்து விலகினார். ஹீத் ஸ்ட்ரீக் விலகியமையானது அவரைச் சார்ந்த ஏனைய வீரர்களும் விலகுவதற்கான அடித்தளமாக அமைந்துவிட்டது.

இப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள தயிபு, கிரிக்கெட் அணியொன்றின் உலகிலேயே வயதில் குறைந்த தலைவர் என்ற பெருமையையும் பெற்றுவிட்டார்.



சிறு பிராயத்தில் இவரது திறமையை இனங்கண்டவர் பில் ப்ளவர் என்பவராவார். இவர் எண்டி ப்ளவர்,கிராண்ட் ப்ளவர் ஆகிய முன்னாள் வீரர்களின் தந்தையாவார்.

தயிபுவுக்கு இவர் தனது மகன் எண்டி ப்ளவரின் கையுறைகளைக் கொடுத்துப் பயிற்சிகளைப் பெற உதவினார்.

2003ம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளிலும் தயிபு விளையாடியிருந்தார். அப்போது இவரது திறமை உலக நாடுகளுக்குப் பளிச்சிட்டது.

இப்போட்டிகளில் இவர் அணியின் விக்கெட் காப்பாளராகவும், துடுப்பாட்ட வீரராகவும் தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இவரது ஆட்டத் திறமையின் காரணமாகவே மேற்படி போட்டிகளில் சிம்பாப்வே அணியினால் இரண்டாவது சுற்றுவரை முன்னேற முடிந்தது.

தற்போது சிம்பாப்வேயில் இலங்கை அணியினர் போட்டியிட்டு வருவதனால், இலங்கை அணிக்குத் தயிபு தலைமையிலான சிம்பாப்வே அணி எந்தளவிற்குச் சவாலாக அமைந்தது என்பதை போட்டி முடிவுகளின் போது அறுதியிட்டுக் கூறமுடியும்.

### தயிபு பற்றிச் சில விபரங்கள்

பெயர் - தயிபு
பிறந்தது - 1983 மே மாதம் 14ம் திகதி.
போட்டியிட்ட முதலாவது டெஸ்ட் போட்டி. மேற்கிந்தியத் தீவுகள் அணியுடன் 2001ம் ஆண்டில்

டெஸ்ட் போட்டிகளில் இவரது திறமை வெளிப்பாடு

| | | |
|---|---|---|
| போட்டிகள் | - | 4 |
| இன்னிங்ஸ் | - | 26 |
| ஓட்டங்கள் | - | 599 |
| ஆகக்கூடிய ஓட்டங்கள் | - | 83 |
| அரைச்சதங்கள் | - | 4 |
| பிடிகள் | - | 26 |
| ஸ்டம்புகள் | - | 4 |

ஒருநாள் போட்டிகளில் திறமை வெளிப்பாடு

| | | |
|---|---|---|
| போட்டிகள் | - | 60 |
| இன்னிங்ஸ் | - | 41 |
| ஓட்டங்கள் | - | 640 |
| ஆகக்கூடிய ஓட்டங்கள் | - | 96 |
| அரைச்சதம் | - | 3 |
| பிடிகள் | - | 48 |
| ஸ்டம்புகள் | - | 3 |

# 'முரளியைப் போன்றவோர் வீரர் மீண்டும் கிடைப்பது சந்தேகமே'

**மார்வன் அத்தபத்து**

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் மார்வன் அத்தபத்துவிடம் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்கு அவர் அளித்துள்ள பதில்கள் வருமாறு.....



கேள்வி : அவுஸ்திரேலிய அணியுடனான போட்டித் தொடரில் தோல்வியுற்றமை தொடர்பாக என்ன கருதுகின்றீர்கள்....?

இப்போட்டிகளில் பந்துவீச்சிலும், துடுப்பாட்டத்திலும் நமது அணியின் வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்தியே இருந்தனர். ஒருநாள் போட்டிகளில் 3 -2 என்ற அடிப்படையில் தோல்வியுற்றாலும் அதனையும் வெற்றிபெட்டியதாகவே கருத வேண்டும். ஏனென்றால் வெற்றியின் விழிம்பில் வைத்துத்தான் நாம் தோல்வியடைய நேரிட்டது.

கேள்வி : ஒருநாள் அணிக்கு மட்டுமன்றி டெஸ்ட் அணிக்கும் தலைவராக .நியமிக்கப்பட்டுள்ளீர்கள்... அணியில் இனிவரும் காலங்களில் மாற்றங்களைக் காணமுடியுமா?

இவற்றை ஒரேயடியாகத் திருத்தியமைப்பது கடினம். அடுத்தடுத்த போட்டிகளில் அணியின் வீரர்களது திறமைகளையும், ஈடுபாட்டையும் கருத்தில் கொண்டு உரிய வகையிலான நெறிப்படுத்தல்களை மேற்கொண்டே மாற்றங்களைக் காணமுடியும்.

கேள்வி : சிம்பாப்வே தொடரை வெல்வீர்களா?

- எந்தவொரு அணியையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. எந்தவொரு அணியும், எந்தவொரு சந்தர்ப்பத்திலாவது எதிர்பாராத வகையில் மிளிரக் கூடிய வாய்ப்புகள் உள்ளன. எனவே இத்தொடருக்கு அவதானமாகவே முகங்கொடுப்போம்.

கேள்வி : இலங்கை அணியில் புதிய முகங்கள் இடம்பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளனவா?

- ஒரேயடியாக நான்கு, ஐந்து பேருக்கு வாய்ப்பு வழங்குவது ஆபத்தானது. ஏனென்றால் அது அணியின் சமபல நிலையைப் பாதித்துவிடும். இதனால் தோல்விகளைச் சந்திக்கவும் நேரலாம். எனவே படிப்படியாகவே தேர்ந்தெடுத்து வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

கேள்வி : இன்னும் சில வருடங்களில் நீங்கள், சனத் ஜயசூரிய, முரளிதரன் ஆகியோர் ஓய்வு பெற்றுவிடுவீர்கள்... உங்கள் மூவரினதும் வெற்றிடங்கள் நிரப்பப்படுமா?
ஓய்வுபெறுவதென்பது தவிர்க்கமுடியாததே. அதிலும் முரளி ஓய்வுபெறும்போது அது அணிக்கு பேரிழப்பாகவே அமையும். இவரைப் போன்றவோர் வீரர் மீண்டும் கிடைப்பது சந்தேகம் தான்!

# மெரடோனாவுக்காகப் பிரார்த்தனைப் பதாகைகள்



ஆர்ஜன்டினாவின் முன்னாள் உதைப்பந்தாட்ட வீரர் மெரடோனா இருதயக் கோளாறின் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டதில் முழு ஆர்ஜன்டினாவுமே ஸ்தம்பிதமடைந்துவிட்டதாம்!

அந்த நாட்டில் உதைப்பந்தாட்டத்தின் மீது அபிமானம் கொண்ட ரசிகர்கள் ஏராளம். அதிலும் மெரடோனாவை அவர்கள் இன்றும் தமது மதிப்பிற்குரிய வீரராகவே கருதி வருகின்றனர்.

மெரடோனா அனுமதிக்கப்பட்டிருந்த மருத்துவமனையை அவரது ரசிகர்கள் சூழ்ந்துகொண்டமை மட்டுமன்றி, அவர் நலமடைய வேண்டும் என்ற பிரார்த்தனைப் பதாகைகளையும் மருத்துவமனையைச் சுற்றிவர ஆங்காங்கே ரசிகர்கள் தொங்கவிட்டமையானது அவர் மீது ரசிகர்கள் கொண்ட அபிமானத்தை வெளிக்காட்டியது.

மெரடோனாவுக்கு வயது 43. கடந்த நான்கு வருடங்களாக அவர் இருதயக் கோளாறின் காரணமாக அவஸ்தைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

போதை மருந்துப் பாவனையே இவர் இவ்வாறு நோய் வாய்ப்படக் காரணம் எனவும் கூறப்படுகின்றது!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வயல் வே. குமாரசாமியின்

# பரப்பரப் பாட்டுக்கள்

## கோலம் பார்!

புல்லிலே பூப் பார்
பூவிலே நிறம் பார்
பல்லிலே வெள்ளை பார்
பாட்டிலே பொருள் பார்

நெல்லிலே நிறை பார்
நீரிலே நிழல் பார்
சொல்லிலே சுவை பார்
சோம்பலை விடப்பார்

கல்வியில் உயர்வார்
கருத்தினைப் புகழ்வார்
நல்வழி செல்வார்
நாட்டினில் உயர்வார்!

## மாலை வானம்

சின்னத் தம்பி பாரடா
சிவந்து வானம் போவதை
மின்னும் இடத்தில் கறுப்பிலே
மேகம் திரண்டு போவதை

குஞ்சுத் தங்கை பாரடி
கோலம் போடும் சூரியன்
கொஞ்சங் கொஞ்சமாகவே
மறைஞ்சு கொண்டு போவதை

மேற்கு வான வெளியிலே
மேயும் நிறங்கள் அழகு பார்
ஆற்ரை வேலை இப்படி?
அவசரமேன் செப்படி!

## வயல் பாட்டு

வரம்பால் நடந்து
வாருங்கள்
வயலின் அழகைப் பாருங்கள்
நிரம்பி நிற்கும் நெற்பயிரின்
நேர்த்தி, பச்சை
பாருங்கள்

உரங்கள் போட்டு
நிலம் உழுது
உழைக்கும் தோழர் உழவர்கள்
வரம்பு கட்டி வடிவாக்கி
வயலில் வேலை செய்கின்ற
கரங்கள் உயரக் கைகோர்ப்போம்
கட்டாயம் நாம் போற்றிடுவோம்

## தோகை மயில்

புள்ளிப் புள்ளித் தோகை மயில்
துள்ளித் துள்ளி ஆடுது
துள்ளித் துள்ளித் தோகை மயில்
சுழன்று சுழன்று ஆடுது
மெள்ள மெள்ளக் கால் தாளம்
போட்டுப் போட்டு ஆடுது
பள்ளிப் பாப்பாப் பிள்ளைகள்
பார்க்க நன்றாய் ஆடுது



உங்கள் பாடசாலைகளிலும் பலவிதமான நிகழ்ச்சிகள் போட்டிகள், வைபவங்கள் நடைபெறலாம். அவை தொடர்பானப் புகைப்படங்களை எமக்கு அனுப்பி வைத்தால் அவற்றை 'விஜய்' யில் பிரசுரிக்கத் தயாராக உள்ளோம். படத்துடன் அவற்றின் விபரங்களையும் எழுத மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி ....

'விழா உலா'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு



இந்துக்கல்லூரி கீழ்ப்பிரிவு மாணவர்களின் இல்ல விளையாட்டுக்களில் வினோத உடைப்போட்டியில் கலந்து கொண்ட மாணவன் புவன் சௌமியன்



லிட்டில் ஏன்ஜல்ஸ் சிறுவர் பாடசாலையின் மாணவ, மாணவியர் இம்முறை புத்தாண்டை கொண்டாடிய காட்சியையே படத்தில் காண்கிறீர்கள்








ஏ. வாஜித் தரம் - 8D
டி. எஸ். சேனாநாயக்க கல்லூரி
கொழும்பு - 08



ஷில்மியா ஆண்டு - 7A
தல்கஸ்பிட்டிய ம. வித்தியாலயம்
அரநாயக்க



கவிஷா நிலுஸ்
சிறுவர் பாடசாலை, பதுளை



சபானா ஹகீம் கான், தரம் 4D
களு/அல்ஹம்ரா மகா வித்தியாலயம்
தர்காநகர்



ச. அனுஷன் தரம் 10B
யா/மல்லாகம் ம. வித்தியாலயம்
யாழ்ப்பாணம்



தனுஷன் தரம் 03 - D
கதிரேஷன் கனிஷ்ட வித்தியாலயம்
நாவலப்பிட்டி

பிள்ளைகளே;
நீங்களும் உங்கள் கைவண்ணங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம்.
உங்கள் சித்திரங்களை A4 தாளில் மாத்திரம் வரைந்து பெயர் விபரங்களைச் சித்திரங்களின் பின்புறமாக எழுத மறவாதீர்கள்
அனுப்பவேண்டிய முகவரி:-

'கைவண்ணங்கள்'
விஜய்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இடைவெளியை நிரப்புக

1. 4, 9, 16, 25, ___ , 49, 64, ___ , 100.
2. $2^2$, ___, $4^2$, ___, ___, 256.
3. 25, 35, ___, 55, 65, ___.
4. 5, ___, 15, ___, ___.
5. 2, 5, ___, 11, ___, 17, ___.

# அறிவுக்கு விருந்து

தயாரிப்பு
நுஸ்பா கௌஸ்

## இவ்விரு படங்களுக்கிடையே ஆகக் குறைந்தது 13 வித்தியாசங்கள் காணப்படுகின்றன. கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.



## இந்த நண்பர்கள் தமது வாகனம் இருக்கும் இடத்தைக் கண்டறிய வழிகாட்டுங்கள்




## கணக்குப் புதிர்

பாண் இறாத்தலொன்றின் விலை, ரூபா 15 எனின்,

1. 2 1/2 இறாத்தல் பாணின் விலை எவ்வளவு?

2. 60 ரூபாவுக்கு எத்தனை இறாத்தல் பாண்கள் வாங்கலாம்?

3. பணிஸொன்றின் விலை ரூபா 7.50 ஆகும். 6 பணிஸ்களை வாங்கும்போது, செலவாகும் பணத்தில் எத்தனை இறாத்தல் பாண்கள் வாங்கலாம்?



## பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் நிரப்புக

1. Quandary ------------------ (குழப்பம், தெளிவு, தூரம், நிறை)
2. Navigator ------------------ (தாதி, பணிப்பாளர், கப்பலோட்டி, பயணி)
3. Kidney ------------------ (இரைப்பை, நுரையீரல், சிறுநீரகம், குடல்)
4. Isle ------------------ (கண்டம், தீவு, மேட்டுநிலம், கடல்)
5. Forgiveness ------------------ (மறதி, மறைவு, மன்னித்தல், மரணித்தல்)

## பொருத்தமானதைத் தேர்ந்தெடுத்து இணையுங்கள்

| | |
|---|---|
| 1. வேர்ட்ஸ் வேர்த் | வானொலிப்பெட்டி |
| 2. 1903ம் ஆண்டு | இலங்கையின் தற்போதைய பிரதமர் |
| 3. கக்லி மார்க்கோனி | தொலைநோக்கி |
| 4. மஹிந்த ராஜபக்ஷ | ஒரு சிறந்த ஆங்கிலக் கவிஞர் |
| 5. 1593ம் ஆண்டு | ஆகாய விமானம் |

## குறுக்கெழுத்துப் போட்டி, இல. 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 த | | 2 க | | ■ | 3 |
| | ■ | | ■ | 4 | ரு |
| 5 வா | | | | | ■ |
| | ■ | 6 | ■ | ■ | 7 |
| 8 | | ■ | 9 | ரி | ■ |
| | ■ | 10 வீ | | ■ | ■ |

**இடமிருந்து வலம்**

1. தென் ஆபிரிக்காவில் காணப்படும் முக்கிய கனிப்பொருள்.
4. பெயராகவும் வினையாகவும் வரக் கூடிய ஒரு சொல்
5. ஒரு பறவையினம்
7. பசு
8. வேகம்
9. அரசினால் அறவிடப்படுவது
10. கேள்வி – பதில் என்பது போல வினா ______

**மேலிருந்து கீழ்**

1. இலங்கையின் தேயிலை ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள இடம்
2. வாசனைத் திரவியமொன்று
3. முற்காலத்தில் கவிஞர்கள் தமது கவிதைகளை இதில் எழுதி பாதுகாத்தனராம்
4. ஆனி மாதத்திற்கு அடுத்த மாதம்
9. உணவு வகையொன்று

பெயர் :- ..........................................

முகவரி :- ..........................................

பாடசாலை :- ..........................................

வகுப்பு :- ..........................................

### போட்டி விதி முறைகள்

1. சரியான விடைகளை உரிய சதுர கட்டங்களில் நிரப்பி கீழேயுள்ள கூப்பனையும் பூர்த்தி செய்து, தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி மே 13ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வையுங்கள்.
2. சரியான விடைகளை எழுதியோரில் பரிசுக்குரியவர்கள் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். 3 அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் அடுத்துவரும் இதழ்களில்பிரசுரமாகும்.

எமது முகவரி →
குறுக்கெழுத்துப் போட்டி - 4
"விஜய்"
த.பெ.எண். 2037
கொழும்பு

### போட்டி. இல - 02இன் விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | ந் | 2 தி | 3 யா | ■ | 4 னை |
| ர | ■ | 5 னை | த | 6 வி | ன் |
| 7 வி | 8 தை | ■ | 9 வ | ரை | அ |
| ■ | 10 ய | ம | 11 ன் | ■ | ■ |
| 12 க | ல் | கி | ■ | 13 ண் | 14 நா |
| டா | ■ | 15 மை | ந் | த | ன் |

பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. சி.பிருந்தா
வெஸ்டன் சினிமா
உடப்புசல்லாவ
2. எஸ்.எச்.ஜெளபர் சாதிக்
169, தன்கல
மல்வானை
3. பாத்திமா நஜாஹறா
விஜித ரோட்
தெஹிவளை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மருந்து வகைகள் தொடர்பான பரிசோதனைகள் மிருகங்களில் ஏன் மேற்கொள்ளப்படுகின்றன?

புதிய மருந்து வகையொன்று கண்டுபிடிக்கப்பட்டு, அது பாவனைக்கு உட்படுத்தப்படுவதற்கு முன், அம்மருந்து கட்டாயமாக வித்தியாசமான இரு உயிருள்ள பாலூட்டிகளில் செலுத்திப் பரிசோதிக்கப்பட வேண்டும் எனப் பிரிட்டிஷ் சட்டம் கூறுகிறது. இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் பாலூட்டிகளில் ஒன்று அளவில் பெரிதானதாகவும், கொறித்து உண்ணும் பழக்கம் அற்றதாகவும் இருக்க வேண்டும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த மருந்து மனிதனால் உட்கொள்ளப்படும் போது அதன் விளைவுகள் எவ்வாறு அமைகின்றன என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்வதற்காகவே இப்பரிசோதனை மேற்கொள்ளப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.





...றுபட்ட ரீதியில் மிருகங்களுக்கு ஏற்படும் உடலழுத்தங்களும் அனுபவங்களும் பரிசோதனை முடிவுகளைப் பாதிப்பதாக அமையவும் கூடும்

சிலவேளை வீடுகளில் பயன்படுத்தும் உணவுப் பொருட்களைக் கூட அவை பயன்பாட்டிற்கு உகந்தவையா? என்பதைக் கண்டறிய மிருகங்களின் மூலமாகவே பரிசோதிக்கப்படுகின்றன. ஒரு சில நாடுகளில் அழகு சாதனப் பொருட்களும் முதலில் மிருகங்களில் பரிசோதிக்கப்பட்ட பின்பே உபயோகப் படுத்தப்படுகின்றன. எனினும் பிரித்தானியாவில் இத்தகைய பரிசோதனைகள் இனிமேல் நடைபெற அனுமதி வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இத்தகைய பரிசோதனைகள் உரிய பயனைத் தருமா?

இத்தகைய பரிசோதனை முறைகள் மூலம் கொடிய தொற்று நோய்களான சின்னம்மை, பொக்களிப்பான், கூவைக் கட்டுப் போன்ற நோய்களுக்கெதிராகத் தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அத்தோடு எச். ஐ. வி, புற்றுநோய் போன்றவற்றைக் குணப்படுத்த உதவும் மருந்துகளை இனங்காணவும் இத்தகைய பரிசோதனைகளையே நாட வேண்டியுள்ளது.

மிருகங்களின் உடலில் அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமாக மனித உடலில் மாற்று உறுப்புக்களைப் பொருத்துவதிலும், இருதய சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதிலும் இத்தகைய மிருக பரிசோதனைகள் உதவின.

எவ்வாறாயினும் குறித்த ஒரு மருந்தை மிருகங்களின் உடம்பினுள் உட்செலுத்துவதனால் ஏற்படக்கூடிய அதே மாற்றங்கள் மனிதனிலும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது! எனவே மாறுபட்ட ரீதியில் மிருகங்களுக்கு ஏற்படும் உடலழுத்தங்களும் அனுபவங்களும் பரிசோதனை முடிவுகளைப் பாதிப்பதாக அமையவும் கூடும்.

## இப்பரிசோதனையின் போது மிருகங்கள் வேதனைப்படுமா?

பரிசோதனை ஆய்வுகூடங்களில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் மிருகங்களுக்கு எவ்வித துன்புறுத்தல்களும் ஏற்படாதிருக்கச் சட்ட விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. எனினும் இத்தகைய சட்ட விதிகளை ஒரு சில மருத்துவ விஞ்ஞானிகள் மீறிச் செயல்படுவதனால் அம்மிருகங்கள் பல்வேறு அழுத்தங்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றன.

## இதற்கு மாற்றுவழியுண்டா?

இதற்கென்று வெற்றிகரமான மாற்றுத் திட்டங்கள் இருக்கவே செய்கின்றன! குறிப்பாக மனித உடலிலிருந்து எடுக்கப்படும் இழையத்துடன் குறித்த மருந்தை இணைத்துப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் ஒரு சில செய்முறைகள் கணனிகள் மூலமாகவும் மேற்கொள்ளப்படுகின்றன.

## உற்பத்திப் பொருட்கள் மிருக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என எவ்வாறு அறியலாம்?

ஆர். எஸ். பி. சி. ஏ போன்ற ஸ்தாபனங்களும், மிருகங்களைப் பராமரிக்கும் துறையைச் சார்ந்தவர்களும் இத்தகைய விடயங்கள் தொடர்பான பட்டியல்களை வைத்துள்ளனர். அதில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் உற்பத்திப் பொருட்கள், பரிசோதனைக்கு உட்படாத உற்பத்திப் பொருட்கள் சம்பந்தமான விடயங்கள் அடங்கியுள்ளன. இவர்களை நாடித் தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.



**'போயிங்' விமானங்கள் உலகளவில் மிகவும் பிரபல்யம் பெற்றவை. எனவே, இந்த போயிங், ரக விமானங்களின் புதிய கண்டுபிடிப்புக்கள் எவை என்பது குறித்து அறிவதில் அநேகம் பேர் ஆர்வமாய் இருப்பர்.**

**படத்தில் காணப்படுவதே சமீபத்திய கண்டுபிடிப்பான 'போயிங்' ரக விமானமாகும். போயிங் 737 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் வேவு பார்க்கும் விமானமாகவே பயன்படுத்தப்படும். கரையோரப் பகுதிகளிலேயே இவை வேவு நடவடிக்கைகளில் ஈடுபடும்.**

## தெரியுமா?

நுளம்புகளின் தொல்லையிலிருந்து மீள்வதற்காக நாம் நுளம்புச் சுருள்களை பயன்படுத்துகின்றோம். ஆனால் நுளம்புச் சுருள் எரிந்து முடிந்தபின்னர் பழையபடி மீண்டும் நுளம்புகள் வந்துவிடுகின்றன. இது எவ்வாறு நடைபெறுகின்றது?

நுளம்புச் சுருள் புகையும் போது அதிலிருந்து ஒருவகை இரசாயனமே புகையாக வெளியேறுகின்றது இந்த இரசாயனப் புகை நுளம்புகளுக்கு ஒத்துவருவதில்லை. எனவே நுளம்புச் சுருள் எரியும் வரையில் அறையுள் அடைந்து கிடக்கும் புகையானது, நுளம்புச்சுருள் புகைந்து முடிந்த பின்னர் படிப்படியாக வெளியேறிவிடுகின்றது. இவ்வாறு புகை வெளியேறியதும் அதே நுளம்புகள் மீண்டும் அறைக்குள் வந்து விடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமரத்து பூதம்

கதை, சித்திரம்:
உதயா




# விவசாயியும் நீலஅரக்கனும்

கதை, சித்திரம்:
தீசா







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2004 மே மாதம் 03ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.